## நக்கல் நமசிவாயம்

சாராயக்கடையள திறந்து எல்லா பிரச்சினைகளையும் மறக்கடிக்கச் செய்திட்டாங்கள் பாருங்கோ... நல்லா நடத்துறாங்கள் ஆட்சி...




Follow us:

# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 332 பிலவ வருடம், புரட்டாசி மாதம் 06 ஆம் திகதி புதன்கிழமை (22.09.2021) ஹிஜ்ரி - 1443, ஸபர் பிறை - 14, 0115886187 - பக்கங்கள் 08

'தமிழன்' மின்னிதழ் பதிப்பு e-Paper




# ஆளுங்கட்சிக்குள் மீண்டும் மோதல்!

- அரசின் பங்காளிகள் முக்கிய சந்திப்பு
- தனிவழி செல்வது குறித்தும் ஆராய்வு



•நமது விசேட செய்தியாளர்

கெரவலப்பிட்டி யுகதனவி மின் நிலையத்தின் 40 வீத பங்குகளை அமெரிக்காவுக்கு வழங்கிய அரசின் தீர்மானத்தை ஆளுங்கட்சியில் அங்கம்வகிக்கும் பங்காளிக் கட்சிகள் கடுமையாக எதிர்த்துள்ளன.

இதனால் அரசிலிருந்து ஒதுங்கி தனியான குழுவாக செயற்படுவது குறித்தும் அந்தக் கட்சிகளின் பிரதிநிதிகள் ஆராய்ந்து வருகின்றனர்.

இதுதொடர்பான முக்கிய சந்திப்பு நேற்றுமுன்தினம் பொரளையிலுள்ள கமியூனிஸ்ட் கட்சியின் தலைமை அலுவலகத்தில் நடந்தது.

நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்தன தேரர், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளரும், இராஜாங்க அமைச்சருமான தயாசிறி ஜயசேகர, தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் அமைச்சர் விமல் வீரவங்ச, ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவர் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, நாடாளுமன்ற...

02≫

# மூன்றாவது முறையாக பிரதமராகிறார் ட்ரூடோ

பெரும்பான்மை கிடைக்காததால் சிறு கட்சிகளுடன் கூட்டு

கனேடிய பொதுத் தேர்தலில் வெற்றிபெற்றதன் மூலம் மூன்றாவது முறையாக பிரதமராகப் பதவியேற்கிறார் ஜஸ்டின் ட்ரூடோ. அவர் தலைமை வகிக்கும் லிபரல் கட்சிக்கு எதிர்பார்த்தளவு வாக்குகள் கிடைக்கப்பெறாத போதிலும் சிறு கட்சிகளின் ஆதரவுடன் ஆட்சியமைக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கனடாவில் அடுத்த ஆட்சியை தீர்மானிக்கும் தேர்தல் நேற்றுமுன்தினம் (20) இடம்பெற்றது. தனது பதவிக்காலம் நிறைவடைவதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்னரே தேர்தலுக்கான அறிவிப்பை பிரதமர் ட்ரூடோ வெளியிட்டார்.

லிபரல் கட்சியின் தலைவரான ஜஸ்டின் ட்ரூடோவுக்கும் அவரை எதிர்த்துப் போட்டியிட்ட கொன்சர்வேட்டிவ் கட்சியின் எரின் ஓடூலுக்கும் இடையில் போட்டி நிலவியது.

02≫

## உள்ளக விசாரணைகள் எமக்கு அவசியமில்லை

**கொலையாளியே கொலையை விசாரிப்பது நியாயமாவென சிறீதரன் எம்.பி. சபையில் கேள்வி**



•சபை செய்தியாளர்கள்

கொலையாளியான அரசாங்கமே கொலையை விசாரிப்பது நியாயமா? எனவே உள்ளக விசாரணையை நாம் கேட்கவில்லை. பாதிக்கப்பட்ட நாங்கள் சுயாதீனமான, தமிழ் மக்கள் நம்பக்கூடிய நேர்த்தியான சர்வதேச விசாரணையை கேட்கிறோம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று (21) நடைபெற்ற மதுவரிக் கட்டளைச் சட்டத்தின்...

02≫

## ஜனாதிபதியும் குவைட் பிரதமரும் நியூயோர்க்கில் சந்தித்துப் பேச்சு



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் குவைட் நாட்டின் பிரதமர் ஷெய்க் சபா அல் – ஹமாட் அல் இற்கும் இடையிலான சந்திப்பு நியூயோர்க், மென்ஹாட்டனில் கடந்த 19 ஆம் திகதி இடம்பெற்றது.

இரு நாடுகளுக்கும் இடையிலான ஐம்பது வருடகால நெருங்கிய தொடர்புகள், நட்புறவுடன் கூடிய இராஜதந்திர உறவுகள் பற்றி நினைவூட்டிக்கொண்ட இரு தலைவர்களும், இந்தத் தொடர்புகளை மேலும் வலுப்படுத்தவேண்டுமென்று வலியுறுத்திக்கொண்டனர்.

இலங்கையர்கள் பலர் குவைட்டில் பணியாற்றுவதாகச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, பயிற்சிபெற்ற...

02≫

## மரண சான்றிதழ் எதற்கு? நீதி மாத்திரமே வேண்டும்

**அன்றேல் உறவுகளை திரும்பத்தாருங்கள் என வலிந்து காணாமல் ஆக்கப் பட்டோரின் குடும்பத்தினர் கோரிக்கை**

**ஐ.நா.வில் ஜனாதிபதி தெரிவித்த கருத்துக்கு கடும் எதிர்ப்பு**

•யாழ்., திருகோணமலை செய்தியாளர்கள்

உள்நாட்டு யுத்தத்தின்போது காணாமல் ஆக்கப்பட்டோருக்கு மரண சான்றிதழ் எதற்கு எனக் கேள்வி எழுப்பியுள்ள வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் நீதியைப் பெற்றுத்தர வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

02≫

## கொழும்பில் பெறுமதியான 3 இடங்கள் குத்தகைக்கு!

**நகர அபிவிருத்தி அதிகாரசபை தீர்மானம்**

•நா. தினுஷா

தலைநகர் கொழும்பில் பெறுமதிவாய்ந்த மேலும் மூன்று இடங்களை 99 வருட குத்தகைக்கு வழங்குவதற்கு அரசாங்கத்தினால் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அறியமுடிந்தது. நகர அபிவிருத்தி அதிகார சபையால் இதற்கான முதலீடுகள் கோரப்பட்டுள்ளன.

இந்த முதலீடுகளைக் கோருவதற்கான விளம்பரங்கள் வெளியிடப்பட்டுள்ளதாக நகர அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் பிரசாத் ரணவீர தெரிவித்தார். கொழும்பு 10 டி.ஆர். விஜேவர்தன மாவத்தையில் அமைந்துள்ள மூன்று இடங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

02≫



## உஷ்

*கிழக்கு மாகாண முஸ்லிம் எம்.பி. ஒருவர் அரசுடன் மிக நெருக்கமாக செயற்பட்டவர். இராஜாங்க அமைச்சுப் பொறுப்பொன்றை ஏற்க அவருக்கு அரச மேலிடத்திலிருந்து தகவல் சென்றது. ஆனால் அவர் அதனை ஏற்க மறுத்துவிட்டாராம்.*

*20 ஆம் திருத்தத்துக்கு ஆதரவளித்து அதற்கு உபகாரம் எதிர்பார்த்தது உண்மை.ஆனால் இப்போதுள்ள நிலைமையில் அரசின் செல்வாக்கு வீழ்ந்துள்ள நிலையில் பதவியை ஏற்று சிக்கி சீரழிவதைவிட அமைதியாக இருப்பதே நல்லதென தீர்மானித்துவிட்டாராம் அந்த எம்.பி.*

*எம் பியின் இந்த நிராகரிப்பு அரசின் மும்மூர்த்திகளில் ஒருவருக்கு கடும் சினத்தை ஏற்படுத்தியுள்ளதாம். சினந்துகொள்வதை தவிர வேறு எதையும் செய்ய முடியாத நிலைமை அவருக்கு...*

## சுகாதார அமைச்சின் 5,925 கோப்புகளை காணவில்லை

**இராஜாங்க அமைச்சர் சன்ன சபையில் தகவல்**

•சபை செய்தியாளர்கள்

மருந்து மாபியாக்கள் கடந்த 2015-2019 இற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் முன்பு எப்போதும் இல்லாதவகையில் பலமடைந்திருந்தன. இவர்களால் தற்போது செயற்பட முடியாது போயுள்ளமையால் தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் தரவுகள் மீது தாக்குதல் நடத்தியிருக்கலாம்.

02≫

## மதுபானசாலைகளை திறந்த முதல்நாளில் காயங்களுடன் 55 பேர் வைத்தியசாலையில்!



மதுபானசாலைகள் திறக்கப்பட்ட கடந்த ஞாயிற்றுக்கிழமை (19) ஒருசில மணிநேரங்களில் போதையால் ஏற்பட்ட தகராறுகள் காரணமாக 55 பேர் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள் ளனர். இவர்களில் பெண்கள் ஐவரும் அடங்குவதாக வைத்தியசாலை தகவல் கள் தெரிவித்தன.

02≫

## உயர்தர பாடங்கள் பூர்த்தியாகாமை; கல்வி அமைச்சு விசேட அவதானம்

•சபை செய்தியாளர்கள்

உயர்தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கான பாடங்கள் பூர்த்திசெய்யப் படாமை தொடர்பில் கல்வி அமைச்சு விசேட அவதானம் செலுத்தியுள்ளதாக அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று (21) விசேட கூற்றொன்றை முன்வைத்து ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ரணில்...

02≫

## ஜனாதிபதி – குவைட்...

தொழிற்படையினருக்கு, மேலும் பல வாய்ப்புகளைத் திறந்துவிடுமாறு கோரிக்கை விடுத்தார்.

கொவிட் தொற்றுப்பரவல் கட்டுப்பாடு மற்றும் நாட்டுக்குள் முன்னெடுக்கப்பட்டு வரும் தடுப்பூசி ஏற்றல் வேலைத்திட்டங்கள் தொடர்பில் எடுத்துரைத்த ஜனாதிபதி, தொற்றுப்பரவல் நீங்கி உலகம் திறக்கப்படும்போது, இரு தரப்புகளுக்கிடையிலான தொடர்புகளைப் பலப்படுத்திக்கொள்ள உள்ள வாய்ப்புகள் குறித்து எடுத்துரைத்தார்.

துறைமுக நகரம், சூரிய மற்றும் காற்றாலை மின்னுற்பத்தி மற்றும் எண்ணெய் சுத்திகரிப்பு போன்ற துறைகளில், குவைட் அரசாங்கத்தால் மேற்கொள்ளக்கூடிய முதலீட்டு வாய்ப்புகள் தொடர்பிலும், குவைட் பிரதமருக்கு ஜனாதிபதி கோட்டாபய எடுத்துரைத்தார்.

உணவுப் பாதுகாப்பு, கல்வி, தகவல் தொழில்நுட்பம் மற்றும் சைபர் பாதுகாப்பு தொடர்பிலும், இரு தலைவர்களும் கலந்துரையாடினர். வெளிநாட்டு அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்க, வெளிநாட்டு அமைச்சின் செயலாளர் அட்மிரல் பேராசிரியர் ஜயநாத் கொலம்பகே ஆகியோரும், இதில் கலந்து கொண்டிருந்தனர்.

## ஆளுங்கட்சிக்குள் ...

உறுப்பினர்களான திஸ்ஸ விதாரண, வீரசுமண வீரசிங்க, இராஜாங்க அமைச்சர் ஜயந்த சமரவீர, கமியூனிஸ்ட் கட்சியின் தலைமைச் செயலாளர் டாக்டர் ஜீ.வீரசிங்க, அதன் முன்னாள் செயலாளர் ரி.யூ.குணசேகர ஆகியோர் இந்த சந்திப்பில் கலந்துகொண்டனர். யுகதனவி மின் நிலையத்தின் 40 வீத பங்குகளை இரகசியமாக, அமைச்சரவையில்கூட முழுமையாக ஆராயாமல் அமெரிக்காவுக்கு வழங்கிய விவகாரம் குறித்து, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாடுதிரும்பிய கையோடு அவருடன் பேச்சு நடத்துவதற்கு மேற்படி கட்சிகளின் பிரதிநிதிகள் தீர்மானித்துள்ளனர்.

கடந்த 17 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்ட இந்த ஒப்பந்தம் உடனடியாக இரத்துச் செய்யப்படவேண்டுமென வலியுறுத்தும் மேற்படி பிரதிநிதிகள், அப்படி நடக்காத பட்சத்தில் அரசியல் தீர்மானமொன்றை எடுக்கவேண்டிவருமெனவும் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இதற்கிடையில், மேற்படி குழு நேற்று மாலை முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனவையும் சந்தித்து இந்த பிரச்சினை குறித்து விளக்கமளித்து அவரின் ஆலோசனையையும் பெற்றதாக அறியமுடிந்தது. எவ்வாறாயினும் அரசு இந்த விடயத்தில் தீர்க்கமான முடிவை எடுக்காத பட்சத்தில் அரசுக்குள் தனியாக செயற்படுவது அல்லது விலகி தனிக்குழுவாக செயற்படுவது என்ற யோசனைகளை மேற்படி குழு ஆராய்ந்துவருவதாக சொல்லப்பட்டது.

## உயர்தர பாடங்கள் ...

விக்ரமசிங்க முன்வைத்த கோரிக்கை தொடர்பில் பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

ரணில் விக்ரமசிங்க எம்.பி. விசேட கூற்றை முன்வைத்து கூறுகையில்,

உயர்தரப் பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கான பாடங்கள் பூர்த்திசெய்யப்படவில்லை என்று மாணவர்கள் தெரிவித்துள்ளனர். அது தொடர்பாக ஆராய்ந்து நடவடிக்கையெடுக்குமாறு கல்வி அமைச்சரவை கேட்டுக்கொள்கின்றேன் என்றார்.

இதன்போது பதிலளித்த கல்வி அமைச்சர் தினேஸ் குணவர்தன, இந்த விடயம் தொடர்பில் கல்வி அமைச்சின் அவதானம் செலுத்தப் பட்டுள்ளதுடன், பரீட்சைகள் ஆணையாளருடனும் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டுள்ளன என்றார்.

## கொழும்பில் பெறுமதியான...

கொழும்பு 10, டி.ஆர். விஜேவர்தன மாவத்தை, இலக்கம் 12 இல் அமைந்துள்ள இலங்கை கண்காட்சி மற்றும் மாநாட்டு மண்டபம், இலக்கம் 38 இல் அமைந்துள்ள மக்கள் வங்கிக்குச் சொந்தமான கட்டிடம், இலக்கம் 40 இல் அமைந்துள்ள சதொச களஞ்சியசாலை ஆகியவையே இவ்வாறு குத்தகைக்கு வழங்கப் படவுள்ளன. இந்த மூன்று இடங்களையும் 6.6 பில்லியன் ரூபாவுக்கு குத்தகைக்கு வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## மதுபானசாலைகளை...

கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அன்றைய தினம் மாத்திரம் 175 பேர் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் மதுபோதையால் தகராறு ஏற்படுத்தி காயங்களுக்குள்ளான 55 பேர் அனுமதிக்கப் பட்டுள்ளனர். இவ்வாறு அனுமதிக்கப்பட்ட அனைவரும் அதிக மதுபோதையில் இருந்ததாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர். மேலும் சிலர், வைத்தியசாலையிலிருந்து தப்பியோடவும் முயற்சித்துள்ளனர்.

பொரளை பகுதியில் கூரிய ஆயுதம் முதுகில் குத்தப்பட்ட நிலையில், நபர் ஒருவர் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் வைத்தியர்கள் தெரிவித்தனர்.

## மூன்றாவது முறையாக...

இந்நிலையில் நேற்று (21) மாலை வெளியான தேர்தல் முடிவுகளின் பிரகாரம் லிபரல் கட்சி 157 ஆசனங்களையும் கொன்சர்வேட்டிவ் கட்சி 121 ஆசனங்களையும் பெற்றுக்கொண்டுள்ளன. மொத்த ஆசன எண்ணிக்கையான 338 இல் ஏனைய ஆசனங்களை சிறு கட்சிகள் பெற்றுக் கொண்டுள்ளன.

இதேவேளை, பெரும்பான்மையைப் பெற்றுக் கொள்ள 170 ஆசனங்களைப் பெறவேண்டிய நிலையில் அதற்குக் குறைவான ஆசனங்களைப் பெற்ற லிபரல் கட்சி முன்னிலை வகித்தது.

பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ பெரும்பான்மை பலம் வேண்டுமென மக்கள் ஆணையை கோரியிருந்த நிலையில், மீண்டும் சிறு கட்சிகளுடன் ஆட்சியமைக்க வேண்டிய நிலைமைக்கு லிபரல் கட்சி தள்ளப்பட்டுள்ளது. இதேவேளை, மூன்றாவது தடவையாக ஜஸ்டின் ட்ரூடோ பிரதமராகப் பதவியேற்கவுள்ளார். அரசியல் இலகுவான காரியமல்ல. புதிய பாதைக்காக தெளிவான தீர்மானத்தை மேற்கொண்ட கனேடியர்களுக்கு நன்றி தெரிவிப்பதாக அவர் நேற்று ஆற்றிய உரையின்போது தெரிவித்துள்ளார்.

# நாட்டு மக்களுக்கு 3 ஆவது தடுப்பூசி

## முன்பதிவு செய்யப்பட்டுள்ளதாக அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம் தெரிவிப்பு

நாட்டு மக்களுக்கான மூன்றாவது தடுப்பூசியை வழங்குவதற்காக தடுப்பூசிகள் முன்பதிவு செய்யப்பட்டுள்ளதாக அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

அதற்காக தேவைப்படும் 14 மில்லியன் பைசர் தடுப்பூசிகளை முன்பதிவு செய்துள்ளதாக அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் தலைவர், விசேட வைத்திய நிபுணர் பிரசன்ன குணசேன தெரிவித்தார்.

அதனடிப்படையில், மூன்றாவது தடுப்பூசியானது எதிர்வரும் ஒக்டோபர் நடுப்பகுதியில் அல்லது நவம்பர் மாத ஆரம்பத்திலிருந்து நாட்டு மக்களுக்கு வழங்கப்படும் என அவர் கூறினார்.

# ரிஷாட்டின் விளக்கமறியல் ஒக்டோபர் 05 வரை நீடிப்பு

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியூதீனின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

ரிஷாத் பதியூதீன் எம்.பி.யை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 5 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை நீதிவான் பிரியந்த லியனகே நேற்று (21) உத்தரவிட்டார்.

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலுடன் தொடர்புடைய பயங்கரவாதிகளில் ஒருவருக்கு நிதிமூலம் பெறுவதற்கு உதவினார் என்ற குற்றச்சாட்டின்பேரில் ரிஷாட் பதியுதீன் கடந்த ஏப்ரல் மாதம் 24 ஆம் திகதி கைதுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# உயர்தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு பைசர் தடுப்பூசி

## கல்வி அமைச்சர் தினேஷ் சபையில் அறிவிப்பு

மாணவர்களுக்கான தடுப்பூசி வழங்கும் நடவடிக்கையில் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ளோருக்கு பைசர் தடுப்பூசிகளை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவினால், தடுப்பூசி தொடர்பில் முன்வைக்கப்பட்ட கருத்துக்கு பதிலளிக் கையிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித் துள்ளார்.

சம்பிக்க ரணவக்க விசேட கூற்றை முன்வைத்து கூறுகையில்,

உயர்தர மாணவர்களுக்கு பைசர் தடுப்பூசியை வழங்கவேண்டும் என்ற கோரிக்கைகள் முன் வைக்கப்பட்டுள்ளன. அவர்களுக்கு கூடிய விரைவில் அவற்றை வழங்கவேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றோம். உயர்தரப் பரீட்சையின் முக்கியத்துவம் தொடர்பில் அறிந்து செயற்படுமாறு கேட்கின்றேன் என்றார்.

இதன்போது பதிலளித்த அமைச்சர் தினேஷ் குணவர்தன கூறுகையில்,

இந்த விடயம் தொடர்பில் கடந்த வாரத்தில் ஜனாதிபதியினால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. சுகாதார அமைச்சு மற்றும் கல்வி அமைச்சு இது தொடர்பில் கலந்துரையாடல்களை ஆரம் பித்துள்ளது. உயர்தர பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு முதலாவதாக பைசர் தடுப்பூசியை வழங்குவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டு அது தொடர்பான வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன என்றார்.

# மதுபானசாலைகள் திறக்கப்பட்டமைக்கு எதிராக இன்று உயர்நீதிமன்றில் மனு

யோ.தர்மராஜ்

கொரோனா தொற்றினால் அனைத்து மக்களும் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், மதுபான சாலைகளை திறப்பதற்கு மாத்திரம் அனுமதி வழங்கியதனூடாக சுய தொழிலாளர்கள் மற்றும் அதிர்ஷ்டலாபச் சீட்டு விற்பனையாளர்களின் அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதால் உயர் நீதிமன்றத்தில் அடிப்படை மனித உரிமைமீறல் மனுவை தாக்கல் செய்யவுள்ளதாக ஐக்கிய தேசிய சுய தொழிலாளர்கள் வர்த்தக சங்கம் தெரிவித்துள்ளது.

சுயதொழில் அடிப்படையில் மரக்கறி, பழங்கள், சிற்றுண்டிகள் மற்றும் விளையாட்டு பொருட்களை விற்பனை செய்து வாழ்க்கை நடத்தும் இலட்சக்கணக்கானோர் நாட்டில் இருப்பதுடன், லொட்டரி விற்பனை ஊடாக தங்களுடைய வாழ்வாதாரத்தை கொண்டுசெல்லும் 40 ஆயிரத்திற்கு அதிகமானோர் இருப்பதாக அச் சங்கத்தின் பொதுச் செயலாளர் கிரிஷான் மாரம்பகே தெரிவித்துள்ளார். கொரோனா தொற்று ஆரம்பித்தபோது, வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டதால் அரசாங்கத்தினால் சில சில மானியங்கள் வழங்கப்பட்டது. எனினும் இம்முறை அதிகமானோருக்கு எவ்வித மானியமும் வழங்கப்பட்டவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும், தற்போதைய சூழ்நிலையில் மதுபானசாலைகளை திறப்பதற்கு மாத்திரம் அனுமதி வழங்கியுள்ளதால் பல்வேறு வியாபாரங்களை முன்னெடுத்து சிறு இலாபத்தை பெற்று வாழ்வாதாரத்தைக் கொண்டுசெல்லும் மக்களுக்கும் தங்களுடைய வியாபாரத்தை முன்னெடுப்பதற்கு அனுமதி வழங்குமாறு கோரி, அடிப்படை உரிமை மீறல் மனுவொன்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

புறக்கோட்டையை அண்மித்த பகுதிகளில் மாத்திரம் இவ்வாறு சிறு சிறு பொருட்களை விற்பனை செய்யும் 3 இலட்ச சுய தொழிலாளர்கள் இருப்பதாக சுட்டிக்காட்டியுள்ள அவர், அவர்களுக்கும் வியாபாரத்தை முன்னெடுக்க அனுமதி வழங்குமாறுக் கோரி கடந்த 19 ஆம் திகதி எதிர்ப்பு நடவடிக்கையொன்றும் முன்னெடுக்கப்பட்டபோது சங்கத்தின் தலைவர் மற்றும் சில உறுப்பினர்களை கைதுசெய்து நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தியதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# கொரோனாவால் 52 கர்ப்பிணிகள் உயிரிழப்பு

யோ.தர்மராஜ்

நாட்டில் மூன்றாவது கொரோனா அலையில் சிக்குண்டு மே மாதத்திற்கு பின்னர் மாத்திரம் 52 கர்ப்பிணிகள் உயிரிழந்துள்ளதாக பொது சுகாதார விசேட வைத்திய நிபுணர் சித்ராமாலி டி சில்வா தெரிவித்தார்.

அத்தோடு, முதல் அலை தொடக்கம் இதுவரை 5 ஆயிரத்திற்கும் அதிகமான கர்ப்பிணிகள் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (21) இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் கொரோனா தொற்று ஆரம்பித்தது தொடக்கம் இதுவரை 5 ஆயிரம் வரையான கர்ப்பிணிகள் கொரோனா தொற்றுக்குள் ளாகியுள்ளனர். இதில் 52 பேர் வரை உயிரிழந்துள்ளனர். எனினும், வருடத்திற்கு ஏனைய நோய் தொற்றுக்களால் 90 – 100 வரையான மரணங்களே பதிவாகின்றன. ஆனால், கொரோனா தொற்றினால் மாத்திரம் இதுவரை 52 பேர் உயிரிழந்துள்ளனர்.

அத்தோடு, மூன்றாவது அலைக்கு பின்னரே அதிக எண்ணிக்கையிலான கர்ப்பிணிகள் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளனர். இந்த 52 மரணங்களும் இந்த வருடத்தில் மே மாதத்திற்கு பின்னரே பதிவாகியுள்ளன. இது கர்ப்பிணிகளுக்கு அதிக ஆபத்தாகும் என்பதாலேயே நாங்கள் விரைவாக தடுப்பூசிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தோம்.

தாய்ப்பாலின் ஊடாக எந்தவொரு குழந் தைக்கும் தொற்று ஏற்படவில்லை. அனைத்து தாயாரும் குழந்தைக்கு தாய்ப்பால் வழங்குமாறு வலியுறுத்தப்பட்டுள்ளனர். மேலும், 9 வீதமான கர்ப்பிணிகளுக்கு இதுவரை தடுப்பூசிகள் வழங்கப் பட்டுள்ளது என்றார்.

## மரண சான்றிதழ் எதற்கு?...

திருப்பி அனுப்புவதாகக் கூறி பொறுப்பேற்கப் பட்ட உறவுகள் வேண்டுமெனவும் அதற்கான நீதி, இழுத்தடிப்பு இல்லாமல் வழங்க ஐ.நா. நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் அவ்வமைப்பு நேற்று (21) வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளதாவது,

வடக்கு, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட் டவர்களின் உறவினர்களாகிய நாம் இன்று ஆயிரத்து 675 ஆவது நாளாக நீதி கோரிய தொடர் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றோம். எம்முடன் இந்தப் போராட்டத்தில் இணைந்திருந்த நூற்றுக்கு மேற்பட்ட சகோதர சகோதரிகளை இழந்து விட்ட நிலையிலும், எமக்கு நீதி கிடைக்கும் வரை போராடுவோம் என்ற முனைப்புடன் உள்ளோம். இந்த நிலையில் ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தில் கலந்து கொள்ளச் சென்ற இலங்கை ஜனாதிபதி அங்கு ஐ.நா. பொதுச் செயலர் அன்டனியோ குட்டரெஸ் உடனான சந்திப்பில் இலங்கையில் காணாமலாக்கப்பட்டவர்களுக்கு மரண சான்றிதழ்களும், நட்டஈடும் கொடுப்பது பற்றி கூறியிருந்தார். அத்துடன் உள்ளகப் பிரச்சினைகள் உள்ளகப் பொறிமுறையினூடாகத் தீர்க்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்ததாக ஊடகங்களில் வெளியான செய்திகளைப் பார்த்து அதிர்ச்சியும், ஆழ்ந்த கவலையும் அடைந்தோம்.

எமது உறவுகள் காணாமல் ஆக்கப்பட்ட விடயத்தில் நேரடியாக சர்வதேசத்தினாலேயே குற்றம் சாட்டப்பட்ட, சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் பாரப்படுத்தும்படி ஐ.நா மனித உரிமை ஆணையாளரால் பரிந்துரைக்கப்பட்ட ஸ்ரீ லங்காவின் ஜனாதிபதியை, அதே ஐ.நா மன்றில் சர்வதேச சமூகம் இன்று வரவேற்று கைலாகு கொடுப்பதை நாம் கவலையுடனேயே உற்றுநோக்குகின்றோம்.

வேறு வழியின்றி எமது கடைசி நம்பிக்கையாக சர்வதேச நீதி பொறிமுறையே இருப்பதால், இந்த இராஜதந்திர சம்பிரதாயங்களையும் தாண்டி சர்வதேசம் பாதிக்கப்பட்ட எமக்கு நீதியை பெற்றுத்தரும் என்று நம்புகின்றோம். இவ்விடயத்தில் ஐ.நா வின் செயலாளர் உட்பட்ட சர்வதேச பிரதிநிதிகள் காணாமல் ஆக்கப்பட் டவர்களின் நிலை மற்றும் நீதி பொறிமுறை தொடர்பாக கேள்வி எழுப்பாமை பாதிக்கப்பட்ட எமக்கு மிகுந்த கவலை அளிக்கின்றது.

2009, மே மாதம் யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதை அடுத்து பாதுகாப்புத் தரப்பினரதும், அரசினதும் உறதிமொழிகளை நம்பி எமது உறவுகளைக் கையளித்தோம். எம் முன்னிலையில் எமது உறவுகள் சரணடைந்தனர். கண்கண்ட சாட்சிகளான நாம், எமது உறவுகளை மீட்பதற்காகப் போராடிக் கொண்டிருக்கின்றோம். ஒரு நாளாவது விடுதலைப்புலிகள் அமைப்பில் இருந்தாலோ அல்லது அவர்களுடன் உறவு பேணியிருந்தாலோ சரணடையுங்கள் அல்லது எம்மிடம் ஒப்படையுங்கள், நாம் புனர்வாழ்வளித்து மீண்டும் உங்களிடம் ஒப்படைப்போம் என்று உறுதியளித்த படையினரதும், அரசினதும் பாதுகாப்புச் செயலர் தற்போது ஜனாதிபதியாக உள்ளார். நாம் எமது உறவுகளை உயிருடனேயே கையளித்தோம். எனவே அவரும் எங்கள் உறவுகளை புனர்வாழ் வளித்து எம்மிடம் ஒப்படைத்திருக்க வேண்டும்.

மாறாக உள்நாட்டிலும், ஐ.நா. தலைமையகத்தில் வைத்தும் மரண சான்றிதழும், நட்டஈடும் கொடுத்து காணாமலாக்கப்பட்டோர் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வருவதாகக் கூறுவது புத்த தர்மத்துக்கு ஏற்புடையதா? இக்கூற்றை நாம் வன்மையாகக் கண்டிப்பதோடு, புத்தபெருமானின் போதனைகளை பின்பற்றும் மற்றும் மனசாட்சி உள்ள ஒவ்வொருவரும் இதைக் வன்மையாகக் கண்டிக்க வேண்டும் என்றும் அழைப்பு விடுக்கிறோம்.

மேலும் உள்ளகப் பொறிமுறையில் எமது பிரச்சினையைத் தீர்ப்பதென்பது கடல் வற்றிக் கருவாடு சாப்பிடுவதற்கு ஒப்பானது. இலங்கையில் தமிழர்களுக்கு நீதி கிடைப்பதே அரிது. அப்படியிருந்தும் அரிதாக ஓரிரு வழக்கில், நீதி வழங்கப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்டாலும் ஜனாதிபதி தன் அதிகாரத்தைப் பயன்படுத்தி பொது மன்னிப்பு வழங்கி விடுவார்.

அத்துடன் அவர்களை மேலும் இதுபோன்ற கொலைகளைச் செய்யத் தூண்டும் விதத்தில் ஊக்குவிப்பதாகப் பதவி உயர்வும் வழங்குவார்கள். உதாரணத்துக்கு அண்மையில் மிருசுவில் 8 பேர் கொலையில் மரண தண்டனை விதிக்கப்பெற்ற சுனில் ரத்னாயக்க.

எனவே எமக்கு மரண சான்றிதழும் வேண்டாம், காணாமல் போனோர் அலுவலகமும் வேண்டாம், இழப்பீடும் வேண்டாம் திருப்பி அனுப்புவதாகக் கூறி பொறுப்பேற்கப்பட்ட எம் உறவுகள் எமக்கு வேண்டும். அதற்கான நீதி இழுத்தடிப்பு இல்லாமல் வழங்கப்பட ஐ.நா.வால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உள்ளக விசாரணைகள்...

கீழ் அறிவித்தல், துறைமுகங்கள் மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத் தின் கீழ் 5 கட்டளைகள், விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழான 6 கட்டளை கள்,வெளிநாட்டு செலாவணிச் சட்டத்தின் கீழான 03 ஒழுங்குவிதிகள், வெளிநாட்டு செலாவணி சட்டத்தின் கீழான கட்டளை மற்றும் இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில்,

முன்னாள் சிறைச்சாலைகள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த அநுராதபுர சிறைச்சாலைக்குள் கடந்த 12ஆம் திகதி நுழைந்து தமிழ் அரசியல் கைதிகளை முழந்தாளிட வைத்து அவர்களை துப்பாக்கி முனையில் மிரட்டியமை அரசாங்கத்தின் ஏதேச்சதிகாரத்தையே காட்டுகிறது. இந்த விடயத்தில் முறையான விசாரணை நடைபெறுகிறது என்றால் லொஹான் ரத்வத்தவை கைதுசெய்திருக்க வேண்டும். சாதாரண நபர் ஒருவர் இவ்வாறு செயற்பட்டிருந்தால் அவர் மீது பயங்கரவாதத் தடைச் சட்டம் பாய்ந்திருக்கும்.

கொழும்பிலிருந்து ஹெலிகொப்டரில் அநுராதபுரத்துக்குப் பயணித்து மதுபோதையில் தனது நண்பர்களுடன் சிறைச்சாலைக்குள் நுழைந் துள்ளார். இச்செயற்பாடானது சட்டம், நல்லிணக்கம் ஆகியவற்றைக் கேள்விக்குட்படுத்துகிறது.

இலங்கை வரலாற்றில் சிறைச்சாலைகள் அதிகாரிகளாலும், அவர்களின் அனுசரணையிலும் ஏராளமான படுகொலைகள் நிகழ்த்தப்பட்டுள்ளன. அதேபோல நீதிமன்ற உத்தரவின்றி சிறைச்சாலைக ளில் உள்ள தமிழ் அரசியல் கைதிகளுக்கு சக கைதிகளால் கொடூரமான முறையில் மரண தண்டனை வழங்கப்பட்டுள்ளன.

இதுவரையில் எந்தவொரு படுகொலைக்குமான நீதி கிடைக்கவில்லை. லொஹான் ரத்வத்த செயற்பாட்டால் தமிழ் அரசியல் கைதிகளின் பாதுகாப்பு கேள்விக்குறியாகியுள்ளது.

லொஹான் ரத்வத்த தமிழ் அரசியல் கைதிகளை சுட்டுக்கொலை செய்திருந்தால், அவரை இந்த அரசாங்கம் ஒரு மனநோயாளி என கூறியிருக்குமா?

காணாமலாக்கப்பட்டவர்களுக்கு மரண சான்றிதழ்களை வழங்கும் பணிகளை விரைவுப்ப டுத்துவதாக ஐ.நா மனித உரிமைகள் பேரவை கூட்டத்தொடரில் கலந்துகொள்வதற்காக அமெரிக்கா சென்றுள்ள ஜனாதிபதி, ஐ.நா பொதுச்செயலாளரிடம் கூறியிருக்கிறார்.

இறுதி யுத்தக்காலப் பகுதியில் ஓமந்தையில் வைத்து தனது உறவுகளை இராணுவத்திடம் ஒப்படைத்தவர்களே காணாமல்போயுள்ளனர். காணாமல் போனவர்களுக்கு மரணச் சான்றிதழ்களை வழங்குவதா ஜனாதிபதியின் பதில்? இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டவர்கள் எல்லாரும் கொல்லப்பட்டுள்ளனரா? ஒப்படைக் கப்பட்டவர்கள் திரும்பி வருவார்கள் என அவர்களது உறவுகள் காத்திருக்கிறார்கள்.

2008ஆம் ஆண்டு கிளிநொச்சியில் இருந்த ஐ.நா. சர்வதேச நிறுவனங்கள் முன்பாக சென்று அங்கிருந்து வெளியேற வேண்டாமென கண்ணீர் மல்க தெரிவித்தார்கள். எங்களை படுகொலை செய்வார்கள். எங்களை இலங்கை அரசாங்கம் கொல்லப்போகிறது என அவர்கள் கண்ணீரோடு தெரிவித்தார்கள்.

எனினும் தமிழ் மக்களை நடுத்தெருவில் அப்போது விட்டுச்சென்ற ஒவ்வொரு பன்னாட்டு நிறுவனமும் தமிழ் மக்களுக்குப் பொறுப்புக்கூற வேண்டும்.

ஆப்கானிஸ்தானிலிருந்து அந்த மக்களை வெளியேற்ற விமானங்கள் அனுப்பப்பட்டன. எனினும் தமிழ் மக்கள் கொல்லப்படும்போது எங்களை பாதுகாக்க எவரும் விமானங்களை அனுப்பவில்லை. எவரும் கப்பல் அனுப்ப வில்லை. உள்ளக விசாரணைக்கு தமிழர்கள் தயாராக வேண்டும் என அரசாங்கம் சொல்கிறது.

சுட்டவர்கள் நீங்கள், பொஸ்பரஸ் குண்டுகள், கொத்தணி குண்டுகளை வீசி கொன்றவர்கள் நீங்கள். நான்கு இலட்ச மக்கள் இருக்கும்போது வெறும் 70 ஆயிரம் மக்கள்தான் இருப்பதாக உணவனுப்பியவர்கள் நீங்கள். பட்டினியால் கொல்லப்பட்டவர்கள் நாங்கள். கொலையாளியான அரசாங்கமே கொலையை விசாரிப்பது நியாயமா? எனவே உள்ளக விசாரணையை நாம் கேட்கவில்லை. பாதிக்கப்பட்ட நாங்கள் சுயாதீனமான, தமிழ் மக்கள் நம்பக்கூடிய நேர்த்தியான சர்வதேச விசாரணையை கேட்கிறோம் என்றார்.

## சுகாதார அமைச்சின்...

இந்தத் தரவுத் தாக்குதலின் பின்புலத்தில் இருப்பது யாரென்பது குறித்த விசாரணைகளை குற்றப்புலனாய்வுத் திணைக்களம் நடத்தி வருகிறது. ஐயாயிரத்து 925 கோப்புகள் காணாமல் போயுள்ளன என இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்தார்.

2015 – 2019 ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் அளவுக்கதிகமான நிதியை செலுத்தி இறக்குமதி செய்யப்பட்டுள்ள மருந்து வகைகள் அடங்கிய தரவுகளே தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையிலிருந்து காணாமல்போயுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நாடாளுமன்றத்தில் நேற்று (21) 27/2 இன் கீழ் கேள்வி எழுப்பியபோதே எதிர்க்கட்சித் தலைவருக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது, குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் மூலம் நடத்தப்பட்டுவரும் விசாரணைகளை அடிப்படை யாகக் கொண்டே உதவி சொலிஸ்டர் ஜெனரல் தமது கருத்தை நீதிமன்றில் முன்வைத்துள்ளார்.

மருந்து மாபியாக்கள் கடந்த 2015-2019 இற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் முன்பு எப்போதும் இல்லாதவகையில் பலமடைந்திருந்தன. இவர்களால் தற்போது செயற்படமுடியாது போயுள்ளமையால் தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் தரவுகள் மீது தாக்குதல் நடத்தியிருக்கலாம். இந்தத் தரவுத் தாக்குதலின் பின்புலத்தில் இருப்பது யாரென்பது குறித்த விசாரணைகளை குற்றப்புலனாய்வுத் திணைக்களம் விசாரணைகளை நடத்தி வருகிறது.

ஐயாயிரத்து 925 கோப்புகள் காணாமல் போயுள்ளன. மூவாயிரத்து 137 கோப்புகள் அதாவது 53 சதவீதமான தரவுகள் மருந்தகங்களை பதிவுசெய்தல் மற்றும் மீள் புதுப்பித்தல் தொடர் பிலான தரவுகளாகும். நான் அமைச்சுப் பதவியை பொறுப்பேற்றுக்கொண்ட பின்னர் இந்தச் செயற்பாட்டடை முறையாக செய்யுமாறு தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் பணிப்பாளர் சபையிடம் கோரிக்கை விடுத்தி ருந்தேன். ஆனால், அவர்கள் உரிய வகையில் இந்தப் பணியை செய்யவில்லை. பணிகளை முறையாக செய்யாமையால்தான் என்.எம்.ஆர்.( தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை) சபையை நீக்க நேரிட்டது. 2015-2019க்கு இடைப்பட்ட காலப்பகுதியில் சில மருந்துகளை கொள்வனவு செய்வதற்காக அரசாங்கம் அளவுக்கு அதிகமான நிதியை செலவிட்டுள்ளது.

இதுகுறித்த கோப்புகள்தான் அதிகமாக காணாமல்போன தரவுகளிலுள்ளன. இவ்வாறு இறக்குமதிசெய்யப்பட்ட மருந்து வகைகளின் பட்டியல் தொடர்பிலான விசார ணைகளை மேற்கொள்வதற்கான தகவல்களை குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திடம் வழங்கியுள்ளோம் என்றார்.

# இன்றைய ராசி பலன்

**நாள்: 22.09.2021 புதன்கிழமை - புரட்டாசி 6**

**ஜோதிடர் நற்பவி**

**தொலைபேசி இலக்கம் : 0715346213/0714037141**

**நட்சத்திரம்: ரேவதி**
அ.கா 5.07 - 23.09.2021
காலை 6.44 வரை

**துருவம்**
பி.ப 1.55 - 23.09.2021
பிற்பகல் 1.49 வரை

**முற்கரணம்: தைதுலம்**
மாலை 6.18 வரை

**பிற்கரணம்: கரஜம்**
மாலை6.18 - 23.09.2021
காலை 6.53 வரை

**திதி: அமர பட்ச துவிதீயை**
அ.கா 5.51 - 23.09.2021
காலை 6.53 வரை

**யோகம்: விருத்தி**
பிற்பகல் 1.55 வரை

**சுப நேரங்கள்**
மாலை 3.04 - 4.33

**அசுப நேரங்கள்**

**ராகு காலம்**
பிற்பகல் 12.04 - 1.35

**குளிகை காலம்**
காலை 10.33-பி.ப 12.04

**எமகண்ட காலம்**
காலை 7.32 - 9.03

**துர் முகூர்த்தம்**
காலை 11.39 - 12.27

லோகநாயகி ஸஹஷ்ர சீர்ஷ வதனா அன்னை பிரத்யங்கிராவின் கருணையாலே நற்பவி

நற்பவி நற்பவி

**மேடம்**
இல்லத்தில் உறவு பிரச்சினைகள் நீங்கும். உறவுகளிடம் கடுமையான சொற்களை தவிர்ப்பதும் நன்மை. வெளிநாட்டு பயணம் உண்டாகலாம்.

**ரிஷபம்**
வணிகத்தில் புதிய நிதி ஒதுக்கீடு நன்மை தரும். பணிகளில் தன்னம்பிக்கை மற்றும் சக பணியாளர்களின் ஒத்துழைப்பும் உண்டாகலாம். இறையருளால் இன்று நல்ல நாளாக அமையலாம்.

**மிதுனம்**
தகவல் தொழில்நுட்ப திறமையானவர்களுக்கு புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கப் பெறலாம். வணிகத்தில் மாற்றங்கள் இடம்பெறலாம். தரகு தொழிலில் இலாபங்கள் அதிகரிக்கும். இன்று சில விடயங்களில் அமைதி காப்பது நன்மை.

**கடகம்**
கலைத்துறை சம்பந்தப்பட்டவர்களுக்கு அதிக பண வரவுகள் கிடைக்கலாம். வேலைத்தளங்களில் அங்கீகாரம் மற்றும் கௌரவம் ஏற்படலாம். புதிய திட்டங்கள் துவங்குதலும் உண்டாகலாம்.

**சிம்மம்**
பிறரின் பலவீனமான விடயங்களில் தலையீட்டை தவிர்ப்பது நன்மை. வயது மூப்படைந்த பெண்கள் உடல்நலத்தில் சிறிய கவனம் தேவைப்படலாம். பணி அல்லது தொழில் விடயங்களில் சரியான தொடர்புகள் இல்லாமல் இருந்தால் சில பிரச்சினைகள் உண்டாகலாம்.

சந்திராஷ்டமம்: பூரம் நட்சத்திரத்திற்கு 23.09.2021 அதிகாலை 12.16 வரை

உத்தரம் நட்சத்திரம்: பாதம் 1க்கு 23.09.2021 அ.கா 12.16- காலை 6.44 வரை

**கன்னி**
இல்லத்தில் அதிகாரமும் தம்பதியரிடையே உறவில் மகிழ்ச்சியும் உண்டாகும். சுப செய்திகள் கிடைக்கக்கூடும். பிள்ளைகளின் விடயங்களில் மகிழ்ச்சி உண்டாகும்.

**துலாம்**
வேலைகளுக்காக காத்திருப்போருக்கு சுபச் செய்திகள் கிடைக்கக்கூடும். காதலர்களுக்கு இனிமையான நாளாக அமையலாம். அரசியல் புகழ் மேம்படும். வணிக தடைகள் நீங்கப் பெறும்.

**விருச்சிகம்**
தம்பதியரிடையே அனைத்து விடயங்களையும் பகிர்ந்து ஆலோசனை பெறுவது நல்லது. வேலைத்தளங்களில் பாராட்டுகளும் சில பொறாமைகளும் உண்டாகலாம். நிறைவேறாத பணிகளில் முயற்சிகள் தேவைப்படலாம்.

**தனுசு**
காணி/வீடு வாங்கும் அல்லது விற்கும் தொழிலில் ஒப்பந்தங்கள் கிடைக்கப் பெறலாம். சிக்கல்கள் தரும் சில எதிர்மறை எண்ணங்கள் நீங்கவும் சில பிரச்சினைகள் தரும் விடயங்கள் நீங்கவும் இறை தியானம் தேவை.

**மகரம்**
வணிகத்தில் சகோதரர்களின் உதவி கிடைக்கப் பெறலாம். சாதகமான வேலை வாய்ப்புகள் உண்டாகலாம். பங்குச்சந்தை நிதி ஒதுக்கீடு நன்மை தரும். சந்தைப்படுத்தும் தொழில் வருவாய் மேம்படும்.

**கும்பம்**
கடனை திரும்ப செலுத்தும் அவசியத்தால் சிறிய பிரச்சினைகள் உண்டாகலாம். ஒவ்வாமை ஏற்படலாம். காதல் உறவுகளில் மென்மையாக இருப்பது நல்லது. வேலைத்தளங்களில் முயற்சியும் திறமையும் தேவைப்படலாம்.

**மீனம்**
நிதி மற்றும் வங்கி பணிகளில் நன்மை கிடைக்கப் பெறலாம். இல்லத்தில் விலை மதிப்பு கூடிய பொருட்களின் கொள்வனவு ஏற்படலாம். சில கௌரவங்கள் உண்டாகலாம்.

# வட மாகாணத்தில் செப்டெம்பர் மாதத்தின் முதல் 20 நாட்களில் 276 கொரோனா மரணங்கள் பதிவு

## விரைவில் தேவையான மின் தகனசாலைகளை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென மருத்துவர் கேதீஸ்வரன் வலியுறுத்து

*(யாழ் செய்தியாளர்)*

வட மாகாணத்தில் இம்மாத முதல் 20 நாட்களில் 276 கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளன. கடந்த 5ஆம் திகதி முதல் இன்று வரை 95 கொரோனா சடலங்கள் மின் தகனத்துக்காக வெளிப் பிரதேசங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. எனவே, காலத்தின் தேவையை உணர்ந்து இயன்றளவு விரைவில் வடமாகாணத்துக்கு தேவையான மின் தகனசாலைகளை அமைக்க சம்மந்தப்பட்ட அனைத்து தரப்பினரும் ஒன்றிணைய வேண்டுமென மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.



வடக்கு மாகாணத்தில் கொரோனா நோய்த்தொற்றினால் உயிரிழப்போரின் சடலங்களை வெளி மாகாணங்களுக்கு மின் தகனத்துக்கு அனுப்பிவைக்கப்படுவது தொடர்பில் விளக்கமளித்து அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

வடமாகாணத்தில் கடந்த ஒகஸ்ட் மாதத்தின் நடுப்பகுதி முதல் கோவிட்-19 தொற்றாளர்களின் எண்ணிக்கையும், இறப்புகளின் எண்ணிக்கையும் சடுதியாக அதிகரித்துள்ளது.

வடமாகாணத்தில் இதுவரை 34 ஆயிரத்து 764 கொரோனா நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். இவர்களில் கடந்த ஒகஸ்ட் மாதத்தில் மட்டும் 14 ஆயிரத்து 586 கொரோனா நோயாளர்களும் செப்டெம்பர் முதல் 20 நாட்களில் 7 ஆயிரத்து 685 கொரோனா நோயாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதேபோன்று, வடமாகாணத்தில் இதுவரை கொரோனா தொற்று காரணமாக 685N உயிரிழப்புகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. இதில் ஒகஸ்ட் மாதத்தில் மட்டும் 228 இறப்புகளும் செப்டெம்பர் மாதம் முதல் 20 நாட்களில் 276 இறப்புகளும் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

சுகாதார அமைச்சின் விதிமுறைகளுக்கமைய கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்ட சடலங்களை தகனம் செய்யப்பட வேண்டுமாயின் மின் தகனசாலையிலேயே தகனம் செய்ய முடியும். வடமாகாணத்தை பொறுத்தவரை யாழ்ப்பாணம் மாநகர சபை மற்றும் வவுனியா நகர சபை ஆகிய இரு மின் தகனசாலைகள் மாத்திரமே காணப்படுகின்றன.

இவற்றில் ஒரு நாளைக்கு ஆகக்கூடியது 11 சடலங்களை மட்டுமே தகனம் செய்ய முடியும். ஆனால் ஒகஸ்ட் மாத நடுப்பகுதியின் பின்னர் இறப்புகளில் ஏற்பட்ட சடுதியான அதிகரிப்பினால் மின் தகனத்திற்காக, சடலங்கள் பல நாட்கள் காத்திருக்க வேண்டியநிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த 3ஆம் திகதியன்று இருந்த நிலைவரப்படி 54 சடலங்கள் மின் தகனத்துக்காக வடமாகாணத்தில் தேங்கியிருந்தன. இந்த சடலங்களை உரிய சுகாதார பாதுகாப்பு நடைமுறையில் பேணுவதற்குரிய குளிரூட்டி வசதிகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே இருந்ததால் 54 சடலங்களையும் உரிய முறையில் பேணுவதில் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கினோம்.

எனவே, மாகாணத்திற்கு வெளி பிரதேசங்களிலுள்ள மின் தகனசாலைகளுக்கு சடலங்களை அனுப்பவேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்பட்டோம்.

எமது வேண்டுகோளுக்கு அமைவாகவும் ஜனாதிபதி வழங்கிய அறிவுறுத்தலுக்கிணங்கவும் வடமாகாண ஆளுநர், பிரதம செயலாளர் மற்றும் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஆகியோரின் முயற்சியின் பலனாக வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களில் இந்த சடலங்களை மின்தகனம் செய்வதற்குரிய அனுமதி கிடைக்கப் பெற்றது.

அதனடிப்படையில் கடந்த 5ஆம் திகதி முதல் இன்று வரை 95 உடலங்கள் மேற்படி மாகாணங்களில் மின் தகனத்திற்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. இதில் 79 சடலங்கள் வடமத்திய மாகாணத்துக்கும் 16 சடலங்கள் கிழக்கு மாகாணத்துக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து 45 சடலங்களும் கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து 28 சடலங்களும் முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து 14 சடலங்களும் வவுனியா மாவட்டத்திலிருந்து 8 சடலங்களும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. வேறு மாகாணங்களுக்கு மின் தகனத்திற்காக அனுப்பப்படும் சடலங்கள் உறவினர்களின் சம்மதத்துடனேயே அனுப்பிவைக்கப்படுகின்றன.

மேற்படி சடலங்களை வேறு மாகாணங்களுக்கு அனுப்புவதற்கான வாகன மற்றும் பயண செலவினையும் அவற்றை கொண்டுசெல்வதற்கான சவப் பெட்டிகளுக்கான செலவுகளையும் சில நன்கொடையாளர்களும், பொது அமைப்புகளும் பொறுப்பெடுத்திருந்தனர்.

இந்நிலையில் கடந்த ஒருவார காலமாக வடமாகாணத்தில் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கையிலும் இறப்புகளின் எண்ணிக்கையிலும் வீழ்ச்சி ஏற்படுவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. எனவே, கடந்த வாரத்தில் வெளி மாகாணங்களுக்கு அனுப்பிவைக்கப்படும் சடலங்களின் எண்ணிக்கையும் குறைவடைந்துள்ளன.

வட மாகாணத்தில் ஏற்பட்ட இந்த நெருக்கடியான சூழ்நிலையில் எமக்கு கைகொடுத்த வடமத்திய மற்றும் கிழக்கு மாகாண அதிகாரிகளுக்கும், மக்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன். இந்த இறுக்கமான சூழ்நிலையில் கொரோனா தொற்றுக்குள்ளான சடலங்களை வெளி மாகாணங்களுக்கு எடுத்துச் செல்வதற்குரிய ஏற்பாடுகளை செய்வதற்கு உதவிய அனைத்து நல் உள்ளங்களுக்கும் வடமாகாண சுகாதார திணைக்களத்தின் சார்பில் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன்.

மின் தகனம் செய்வதற்குரிய வாகன ஒழுங்குகளை மேற்கொண்டும் மேலும் பல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கிய இராணுவத்தினர் மற்றும் பொலிஸாருக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். இலங்கையின் பல மாவட்டங்களில் 3 முதல் 4 வரையான மின் தகனசாலைகள் காணப்படுகின்றன. ஆனால் வடமாகாணம் முழுவதற்கும் இரு மின் தகனசாலைகள் மட்டுமே இருக்கின்றன. எனவே மேலும் சில மின் தகனசாலைகளை அமைக்கவேண்டியது காலத்தின் கட்டாயமும் எதிர்காலத்தின் தேவையும் ஆகும்.

தற்போது வடமாகாணத்திலுள்ள சில உள்ளூராட்சி மன்றங்கள் மின் தகனசாலைகளை அமைப்பதற்குரிய முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றன.

எனவே, காலத்தின் தேவையை உணர்ந்து இயன்றளவு விரைவில் வடமாகாணத்திற்கு தேவையான மின்தகன சாலைகளை அமைக்க சம்மந்தப்பட்ட அனைத்து தரப்பினரும் ஒன்றிணைவோம் என்றார்.

## கொரோனா தொற்றுக்குள்ளானோர் விபரம்

| மொத்த பாதிப்பு | சிகிச்சை பெறுவோர் | குணமடைந்தோர் | புதிதாக அடையாளம் | மரணம் |
|---|---|---|---|---|
| 5,06,927 | 60,503 | 4,34,140 | 1,518 | 12,284 |



*இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்ட தேசிய பாடசாலைகள் சேவை சங்கத்தின் அதிகாரிகள் நேற்று கணனி குற்ற விசாரணைப் பிரிவுக்கு வருகைதந்திருந்தபோது... (படப்பிடிப்பு - கிரிஷான் காரியவசம்)*

# நடைமுறைக்கு வந்தது பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு சட்டமூலம்



இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டமூலத்தில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நேற்று (21) முற்பகல் கையொப்பமிட்டு அதனை சான்றுரைப்படுத்தினார்.

நிதி அமைச்சரினால் கடந்த ஜூலை மாதம் 09ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட இந்தச் சட்டமூலம், கடந்த ஜூன் மாதம் 28ஆம் திகதி வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டிருந்தது.

அதற்கமைய 2021ஆம் ஆண்டு 19ஆம் இலக்க இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டம் நேற்று (21) முதல் நடைமுறைக்கு வருகிறது.

# வீடொன்றில் புகுந்து அடாவடி; பாசையூரில் எழுவர் கைது

பாசையூரில் வீடொன்றுக்குள் புகுந்து தாக்குதல் நடத்தி விட்டு தப்பித்துச் சென்ற கும்பலைச் சேர்ந்த 7 பேர் யாழ் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சம்பவம் இடம்பெற்று அரை மணிநேரத்தில் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

பாசையூர் பிரதேசத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் 2.30 மணியளவில் அந்தோனியார் கோயிலுக்கு அண்மையாகவுள்ள வீடொன்றுக்குள் புகுந்த 7 பேர் கொண்ட கும்பலொன்று பெறுமதிமிக்க பொருட்களை உடைத்து அடாவடித்தனம் செய்துள்ளதுடன் வீட்டிலிருந்தவர்களையும் அச்சுறுத்திவிட்டுத் தப்பித்துச் சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் கிடைத்த தகவலின் அடிப்படையில் யாழ்ப்பாணம் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை முன்னெடுத்தனர்.

அதனடிப்படையில் நடத்தப்பட்ட தேடுதலில் 3 மோட்டார் சைக்கிள்களில் பயணித்த 7 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து வாள் ஒன்றும் இரண்டு மரக்கட்டைகளும் கைப்பற்றப்பட்டன.

பாசையூர், மணியந்தோட்டம் பகுதிகளைச் சேர்ந்த 22 வயதுக்கும் 27 வயதுக்கும் உட்பட்ட 7 பேரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் 7 பேரும் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் 3 மோட்டார் சைக்கிள்கள் உள்ளிட்ட வழக்கு பொருட்களும் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

# சிலாவத்துறை - புதுவெளி முஸ்லிம் மையவாடியில் கரப்பந்தாட்ட மைதானம் அமைக்க நடவடிக்கை

## வேறு இடத்தில் நிர்மாணிக்குமாறு முசலி மஸ்ஜிதுத் தக்வா ஜும்ஆப் பள்ளிவாசல் நிர்வாகம் கோரிக்கை

**(மன்னார் நகர் நிருபர்)**

முசலி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சிலாவத்துறை, புதுவெளி பிரதேசத்திலுள்ள முஸ்லிம் மையவாடியில் கரப்பந்தாட்ட மைதானம் அமைக்க ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. இந்நிலையில் குறித்த நடவடிக்கையை உடனடியாக நிறுத்துமாறு கோரி முசலி மஸ்ஜிதுத் தக்வா ஜும்ஆப் பள்ளிவாசல் நிர்வாகம் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரிடம் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளது.





இந்த விடயம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

முசலி மஸ்ஜிதுத் தக்வா ஜும்ஆப் பள்ளிவாசலுக்கு சொந்தமான சுமார் 2 ஏக்கர் காணியில் பாலர் பாடசாலை, பள்ளிவாசல், மையவாடி போன்றவை அமைந்துள்ளன.

எனினும், மையவாடிக்கென ஒதுக்கப்பட்ட காணிக்குள் கரப்பந்தாட்ட மைதானம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதோடு, ஆரம்ப கட்ட பணிகள் இடம்பெற்று வருகின்றன.

குறித்த விளையாட்டு மைதானம் அமைக்கும் நடவடிக்கைக்கு கிராம மக்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ள போதும், உரிய அதிகாரிகள் குறித்த விளையாட்டு மைதானத்தை மையவாடி பகுதியில் அமைக்க நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

எனவே இந்த விளையாட்டு மைதானம் மையவாடி பகுதியில் அமைக்கப்படுவதை நிறுத்தி வேறு இடத்தில் அமைக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்வதாக முசலி மஸ்ஜிதுத் தக்வா ஜும்ஆப் பள்ளிவாசல் நிர்வாகம் அரசாங்க அதிபரிடம் கோரிக்கை முன் வைத்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டி மெல்லிடம் வினவிய போது,

இது தொடர்பில் முசலி மஸ்ஜிதுத் தக்வா ஜும்ஆப் பள்ளிவாசல் நிர்வாகத்தினால் எனது கவனத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளதோடு, மையவாடி பகுதியில் அமைக்கப்படவுள்ள கரப்பந்தாட்ட மைதானப் பணியை நிறுத்தி வேறு இடத்தில் அமைக்க கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதனை முசலி பிரதேச செயலாளரின் கவனத்திற்கு கொண்டு வந்ததோடு, ஆராய்ந்து துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பிரதேச செயலாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளேன் என அவர் குறிப்பிட்டார்.

இலங்கையில் இனங்களுக்கிடையில் ஒற்றுமையை பலப்படுத்திக்கொண்டு முன்னோக்கி நகர்வதற்கான முழுமையான ஒத்துழைப்பை, மிகவும் நேர்மறையான முறையில் ஐக்கிய நாடுகள் சபை இலங்கைக்கு வழங்குமென்று, அதன் பொதுச் செயலாளர் அன்டனியோ குட்டரெஸ் (Antonio Guterres) ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் தெரிவித்துள்ளார்.

நியூயோர்க்கிலுள்ள ஐக்கிய நாடுகள் சபைத் தலைமையகத்தில், கடந்த 19 ஆம் திகதி இடம்பெற்ற ஜனாதிபதிக்கும் ஐ.நா. பொதுச் செயலாளருக்கும் இடையிலான விசேட சந்திப்பின் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தாரென ஜனாதிபதி அலுவலகம் தெரிவித்துள்ளது. ஜனாதிபதி அலுவலக செய்திக்குறிப்பில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

சிறிய பொருளாதாரத்தைக் கொண்டுள்ள இலங்கை போன்ற நாடொன்று, கொவிட் தொற்றுப் பரவலுக்கு மத்தியில் முகங்கொடுத்துள்ள சவால்கள் தொடர்பில், ஜனாதிபதி ராஜபக்ஷ, ஐ.நா. பொதுச் செயலாளருக்கு எடுத்துரைத்தார். கொவிட் தொற்றுப் பரவலுக்கு மத்தியில், இலங்கையின் கல்வி மற்றும் பொருளாதாரத்துக்கு ஏற்பட்டுள்ள பாரிய அச்சுறுத்தல்கள் தொடர்பிலும் தீர்க்கமான முறையில் எடுத்துரைத்த ஜனாதிபதி, தொற்றுப்பரவலை வெற்றிகரமாக எதிர்கொள்ள, உலக சுகாதார ஸ்தாபனம் வழங்கி வரும் ஒத்துழைப்புக்கும் பாராட்டுகளைத் தெரிவித்தார்.

இதுவரையில், இலங்கையின் மொத்த சனத்தொகையில் அரைவாசிக்கும் மேற்பட்டோருக்கு தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, நவம்பர் மாத இறுதிக்குள், 15 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் தடுப்பூசி ஏற்றுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று, தரவுகளுடன் எடுத்துரைத்தார்.

இதன்போது, தடுப்பூசி ஏற்றலில் இலங்கை அடைந்துள்ள முன்னேற்றத்துக்கு, பொதுச் செயலாளர், தனது பாராட்டுகளைத் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்டோருக்கு நட்டஈடு வழங்கல், காணிகளை மீளக் கையளித்தல் மற்றும் 2009ஆம் ஆண்டில், மஹிந்த ராஜபக்ஷவின் வழிகாட்டலின் கீழ் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் முன்னெடுக்கப்பட்ட பாரிய அபிவிருத்திகள் மற்றும் வடக்கு மாகாண சபைக்கான உறுப்பினர்களை, ஜனநாயக ரீதியில் தேர்ந்தெடுப்பதற்காக ஏற்படுத்திக்கொடுத்த வாய்ப்பு தொடர்பிலும், ஜனாதிபதி எடுத்துரைத்தார்.

காணாமற்போனோர் தொடர்பில், அரசாங்கம் என்ற ரீதியில் எடுக்கக்கூடிய நடவடிக்கைகளை விரைவில் முன்னெடுப்பதாகவும் மரணச் சான்றிதழ்களை வழங்கும் நடவடிக்கைகளை விரைவுபடுத்துவதாகவும், பொதுச் செயலாளரிடம், ஜனாதிபதி தெரிவித்தார்.

பயங்கரவாதச் செயற்பாடுகளுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருந்த இளைஞர்களில் பலரை, தான் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் விடுவித்துள்ளதாக எடுத்துரைத்த ஜனாதிபதி, அவ்வாறு விடுவிக்க முடியாத ஏனையோர் தொடர்பான வழக்கு நடவடிக்கைகள்

Follow us:

தமிழன்
THAMILAN தமிலன்
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2021, செப்டெம்பர் 22ஆம் திகதி, புதன்கிழமை

# ஜனாதிபதியின் கருத்தும் தமிழர்களும்

துரிதப்படுத்தப்பட்டு வருவதாகவும் நீண்ட காலமாக தடுப்பிலுள்ள தமிழ் இளைஞர்கள் தொடர்பிலான சட்டச் செயற்பாடுகள் முடிவடைந்த பின்னர், நீண்ட காலம் தடுப்பில் இருந்ததைக் கருத்திற்கொண்டு, ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் பேரில் அவர்களை விடுவிப்பதற்குத் தான் தயங்கப் போவதில்லை என்றும், பொதுச் செயலாளரிடம் தெரிவித்தார்.

இலங்கைக்குள் மிகவும் பலமான முறையில் ஜனநாயகத்தை நிலைநாட்டுவதே தன்னுடைய இலக்கு என்றும் அதன்படி, போராட்டக்காரர்கள் மீது முன்னரைப் போன்று தடியடி, நீர்த்தாரைத் தாக்குதல் போன்றவற்றை நடத்த, தன்னுடைய ஆட்சியின் கீழ் ஒருபோதும் அனுமதியில்லை என்றும் போராட்டக்காரர்களுக்கென்றே, தன்னுடைய அலுவலகத்துக்கு முன்னால் தனி இடமொன்று ஒதுக்கப்பட்டுள்ளதென்றும் ஜனாதிபதி, தெரிவித்தார். நாட்டுக்குள் அபிவிருத்தி மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காக, சிவில் அமைப்புகளுடன் இணைந்து தான் செயற்படும் விதம் தொடர்பிலும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெளிவுபடுத்தினார்.

இலங்கையின் உள்ளகப் பிரச்சினைகள், நாட்டுக்குள்ளேயே உள்ளகப் பொறிமுறையினூடாகத் தீர்க்கப்பட வேண்டுமென்றும் அதற்காக, புலம்பெயர் தமிழர்களுடனான பேச்சுவார்த்தைக்குத் தான் அழைப்பு விடுப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் சபையுடன், எப்போதும் மிக நெருக்கமாகப் பணியாற்றத் தயாரென மீண்டுமொருமுறை எடுத்துரைத்த ஜனாதிபதி, நாட்டுக்குள் மீண்டும் பிரிவினைவாதம் ஏற்படப்போவதில்லை என்பதைத் தன்னால் உறுதிப்படத் தெரிவிக்க முடியுமென்றபோதிலும், மதவாதத் தீவிரவாதம் தொடர்பில், அரசாங்கம் என்ற ரீதியில் இலங்கை போன்று ஏனைய நாடுகளும் அவதானமாக இருக்க வேண்டுமென்று எடுத்துரைத்தார்.

ஜனாதிபதியின் மேற்படி கருத்துகள் சர்வதேச சமூகத்திற்கு வேண்டுமானால் திருப்தியை தரக் கூடும். ஆனால், வெந்துபோயுள்ள தமிழர்களின் மனதில் இவை வேலைப்பாய்ச்சியுள்ளன என்றே கூறவேண்டியுள்ளது. காணாமல் போனவர்களுக்கு மரண சான்றிதழ் வழங்கப்படுமென மிக இலகுவாக, இலாவகமாக கூறப்பட்டுள்ளது.

இறுதிப்போருக்கு முன்னரும் பின்னரும் இறுதிப்போரின்போதும் காணாமல் போனவர்களுக்கு என்ன ஆனது? காணாமல் போனவர்கள் திரும்பி வருவார்களென்ற அந்த குடும்பங்களின் எதிர்பார்ப்புகளுக்கு என்னாகும்? உள்ளக பொறிமுறையில் தீர்வென்றால் அந்த பொறிமுறை என்ன? அரசியலமைப்பினூடாக வழங்கப்படும் தீர்வா? இலங்கையின் அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மொழி, மத உரிமைகள் கூட மதிக்கப்படாத ஒரு சூழ்நிலையில் உள்ளகப் பொறிமுறை மூலம் தீர்வை வழங்கமுடியுமென கூறும் அரசின் பேச்சை எப்படி நம்புவது?

சரி, இவற்றையெல்லாம் செய்ய அரசுக்கு தற்துணிவு இருக்குமாயின் ஆட்சியேற்று இவ்வளவு காலத்தில் அதற்குரிய முன்னேற்பாடுகளை ஏன் அரசு செய்யவில்லை? குறைந்தபட்சம் தமிழ் மக்களின் பிரதிநிதிகளை அழைத்துப் பேசியிருக்கலாம். அதுவும் இல்லை. இப்படி எதுவும் செய்யாமல், குறைந்தபட்சம் இலங்கைவாழ் தமிழ்ப்பேசும் மக்களுக்கு குறைந்தபட்ச உரிமைகளை உறுதிசெய்யாமல், புலம்பெயர் தமிழர்களை அழைத்தால் அவர்கள் எப்படி இங்கு வருவர்?

மத சுதந்திரம் இங்கு இருப்பதாக குறிப்பிடும் ஜனாதிபதி, ஈஸ்ரர் தினத் தாக்குதலின் பின்னர் இலங்கைவாழ் அனைத்து முஸ்லிம்களும் தீவிரவாதிகள் என்று முத்திரை குத்தப்பட்டுள்ளதை அறியாதவரா? முஸ்லிம்கள் மீது அடக்குமுறை பிரயோகிக்கப்படுவது குறித்து மத சுதந்திரங்களுக்கான ஐ.நா. தூதுவர் ஒருவரே கடந்த காலங்களில் அதிருப்தி வெளியிட்டிருந்தார் என்பதை நினைவூட்ட வேண்டியுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அரசும் வழமையான இலங்கை ஆட்சியாளர்களுக்கே உரித்தான வகையில் ஒப்புக்கு சப்பாணி கட்டத் தொடங்கியுள்ளது. இதே கதைகளைத்தான் முன்னர் இருந்த ஆட்சியாளர்களும் கூறிவந்தனர். என்ன சற்று வித்தியாசமாக கூறி, ஆட்சிக்கு வரும்போது வழங்கிய தேர்தல் வாக்குறுதிகளை போன்று ஐ.நா செயலர் ஊடாக உலகத்திற்கு கதை சொல்லியிருக்கிறார் கோட்டாபய. இந்த கதைகளின் உண்மைத்தன்மைகளை அறியாதவர்களல்லர் மக்கள். தாமதிக்கப்படும் நீதி மறுக்கப்படும் நீதிக்கு சமன் என்று சொல்வார்கள். தமிழர்களை பொறுத்தவரை அவர்களுக்கு நீதி தாமதிக்கப்படவோ அல்லது மறுக்கப்படவோ இல்லை. அவர்களுக்கு நீதியே கிடைக்கப்போவதில்லை என்பதே வரலாறு. ஜனாதிபதியின் ஐ.நா. உரை அதனையே சொல்லியிருக்கிறது.

## நுளம்புகள் படையெடுப்பா? போரிடுவோம்

## அலெக்சாண்டரையே கொன்றது நுளம்புதான்!

மழையின் உடனடி விளைவு நுளம்புகள். மனிதகுலம் தோன்றியதிலிருந்தே இந்த உயிரினத்தோடு போராடி போராடி தோற்றுக் கொண்டுதான் இருக்கிறது. காலம் காலமாக புதுப்புது 'நுளம்பு விரட்டி' ஆயுதங்களுடன் நுளம்புகளை ஒழிப்பதற்காக மனித குலம் சண்டையிட்டுக் கொண்டே இருக்கிறது. நுளம்புகளும் அயராமல் தங்களால் முடிந்த புதுப்புது நோய்களை மனிதர்கள் மேல் ஏவியபடி இருக்கின்றன. போர் முடிவுக்கு வராமல் அன்றாடம் தொடர்ந்தபடி இருக்கிறது.

சின்னஞ்சிறு நுளம்பு நம்மை என்ன செய்ய முடியுமென நினைக்க வேண்டாம். உலகையே தன் வீரத்தால் மிரளவைத்த மாவீரர் அலெக்ஸாண்டர் போரிலோ அல்லது எதிரிகளால் கொல்லப்பட்டோ இறக்கவில்லை. நுளம்புக்கடியால் ஏற்படும் 'வெஸ்ட் நைல் வைரஸால் தாக்குதலுக்குள்ளாகி இறந்தார் என்கிறது வரலாறு. அவர் மரணம் குறித்து 2003 இல் ஓர் ஆராய்ச்சிக் கட்டுரையே வெளியாகி, உலகெங்கும் பரபரப்பை ஏற்படுத்தியது. ஆக, அலெக்ஸாண்டரின் உயிரே ஒரு நுளம்பின் கையில்தான் இருந்திருக்கிறது.

எளிதில் அழிக்க முடியாத ஓர் உயிரினம் நுளம்பு. உலகில் வேறு எந்த மிருகத்தாலும் மனிதனுக்கு ஏற்படும் மரணங்களைவிட நுளம்புகளால் ஏற்படும் மரணங்கள் மிக அதிகம். டெங்கு, மலேரியா, மஞ்சள் ஜுரம், மூளைக்காய்ச்சல் என்று ஏற்படுத்தி மொத்தமாக மனித உயிரை வாங்கிவிடுகிறது. ஒரு நுளம்பால் நூறு பேருக்கு மேல் நோய்த்தொற்றை ஏற்படுத்த முடியும். உலக சுகாதார நிறுவனத்தின் புள்ளிவிவரப்படி, ஆபிரிக்காவில் ஒவ்வொரு நாற்பத்தைந்து வினாடிகளுக்கும் ஒரு குழந்தை மலேரியாவால் இறக்கிறதாம்.

நுளம்புகளை தவிர்க்க முடியாது. தடுக்கமுடியும். கீழ்க்கண்ட வழிமுறைகள் உங்களுக்கு உதவலாம்.

★அதிகாலையும் அந்தியும் நுளம்புகள் மனிதர்களைத் தேடி உற்சாகமாக வரும் பொழுதுகள். இந்த நேரங்களில் கதவு, ஜன்னல்களை அடைத்துவிட்டு வீட்டுக்குள் இருப்பது நலம். நுளம்புகள் வளர தண்ணீர் அவசியம் தேவை. வீட்டைச் சுற்றியுள்ள இடத்தில், முற்றத்தில், செல்லப் பிராணிகளுக்கு தண்ணீர் வைக்கும் பாத்திரங்களில், சாக்கடையில், குழாய் அடியில் நீர் தேங்காமல் பார்த்துக் கொள்ளவும்.

★நுளம்புக்கடியிலிருந்து தப்ப தொளதொளவென்றிருக்கும், வெளிர் நிறம் கொண்ட ஆடைகளை அணியலாம். முழுக்கை சட்டை, பேன்ட் அணிந்திருப்பது நலம். நுளம்புக்கடிக்கு பயந்து, சிலர் சாக்ஸ்களையும் கையுறைகளையும் அணிந்து கொள்வதும் உண்டு.

★நுளம்புக்கடியிலிருந்து பாதுகாத்துக் கொள்ள இரசாயனம் கலந்த பொருட்களைப் பயன்படுத்துவதை தவிர்ப்பது நல்லது. மாறாக, நுளம்பு விரட்டி மட்டைகளைப் பயன்படுத்தலாம். உறங்கும்போது நுளம்பு வலை பயன்படுத்தலாம். ஜன்னல் வழியே கொசு வராமல் இருக்க, ஜன்னல் வலைகளை பொருத்திக் கொள்ளலாம்.

★வீட்டுக்கு அருகே சாமந்திப்பூ செடியை வளர்ப்பது நல்ல பலன் தரும். இந்தப் பூவின் வாசனை நுளம்புகளுக்குப் பிடிப்பதில்லை. அதனால் நம்மை நெருங்காது.

★உங்களுக்குப் பின்னால் டேபிள் ஃபேனை நெருக்கமாக வைத்து முழு வேகத்தில் ஓடவிட்டால் நுளம்புகள் அண்டாது.

★வீட்டுத் தோட்டத்தில் தும்பி வளர்த்தால் நுளம்புகள் வராது என்று கண்டுபிடித்திருக்கிறார்கள் ஆய்வாளர்கள்.

★உடலில் லவங்கப்பட்டை எண்ணெய் அல்லது யூகலிப்டஸ் எனப்படும் நீலகிரித் தைலத்தைத் தடவிக் கொண்டாலும் நுளம்புகள் விலகும். பக்க விளைவுகள் இல்லை.

**- யுவகிருஷ்ணா**



# பெண்களுக்கு எதிரான தலிபான்களின் போர்

ஓர் இளம் ஆப்கானிஸ்தான் தாய்க்குக் காய்ச்சல் நீடித்த தன் குழந்தையை மருத்துவரிடம் அழைத்துச்செல்ல வேண்டும். இது தலிபான்கள் கட்டுப்பாட்டில் அவ்வளவு எளிய பணியல்ல. ஏனெனில், அவருக்குத் துணையாகச் செல்வதற்கு ஆண் உறவினர் இல்லை. அந்நிய ஆண் ஒருவரிடம் அவ்வாறு கேட்பது கடுமையான தண்டனைக்குரிய குற்றம். தனியாகச் செல்வது கசையடிகளை வாங்கித் தரும் அபாயம் கொண்டது என்று அறிந்தும் அவள் தயாராகிறாள். தலிபான்களின் சட்டத்தின்படி, கூடாரம் போன்ற பர்தாவில் முழு உடலையும் மூடிக்கொண்டு குழந்தையுடன் புறப்படுகிறாள். அவள் அப்படிச் செய்யக் கூடாது. ஆனால், குழந்தையை நேசிக்கும் ஒரு தாய்க்கு வேறு தெரிவுகள் இல்லை.

வீட்டிலிருந்து தெருவில் இறங்கிச் சிறிது தூரம் நடந்து சந்தையை நெருங்கியபோது, ஒரு தலிபான் காவலன் அவளைத் தடுக்கிறான். குழந்தையைக் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணமே தாயிடம் மேலோங்கியிருக்கிறது. ஆனால், அவன் தனது ஆயுதத்தை உயர்த்தி அவளைச் சுட்டான். மீண்டும் மீண்டும் சுட்டான். தாயும் குழந்தையும் தரையில் வீழ்ந்தனர். சந்தையில் கூடியிருந்தவர்கள் அவளைக் காப்பாற்ற முற்பட்டனர். தலிபான் காவலன் மனம் மாறவில்லை. அவனைப் பொறுத்தவரை அந்தப் பெண் தனியாக வெளியே வந்திருக்கக் கூடாது. தலிபான்கள் ஆட்சியில் இவ்வாறு தண்டிக்கப்பட்ட ஒரேயொரு தாய் அல்ல இவர். 1996இல் காபூலின் கட்டுப்பாட்டை தலிபான்கள் கைப்பற்றியபோது, இவ்வாறு பல பெண்கள் தண்டிக்கப்பட்டார்கள். அடித்துத் துன்புறுத்திக் கொல்லப்பட்டார்கள்.

இது ஆப்கானிஸ்தானின் பொதுவான வரலாறு இல்லை. தலிபான்களின் எழுச்சிக்கு முன்னர், ஆப்கானிஸ்தானில் சட்டத்தினால் பெண்கள் பாதுகாக்கப்பட்டனர். 1920களில் பெண்களுக்கு வாக்குரிமை கிடைத்தது. 1960களில் ஆப்கானிஸ்தான் அரசியலமைப்பு பெண்களுக்குச் சமத்துவத்தை வழங்கி, ஜனநாயகம், சகிப்புத்தன்மையை நோக்கி நாடு நகரத் தொடங்கியது. 1977களில் 15% பெண்கள் ஆப்கானிஸ்தான் சட்டமன்றத்தில் இருந்தனர். 1990களின் முற்பகுதியில் 70% பாடசாலை ஆசிரியர்கள், 50% அரசு ஊழியர்களும் பல்கலைக்கழக மாணவர்களும் பெண்களாக இருந்தனர். காபூலில் 40% பெண் மருத்துவர்கள் இருந்தனர். 1996 செப்டெம்பரில் தலிபான்கள் காபூலைக் கைப்பற்றி பல்கலைக்கழகத்தை மூடுவதற்கு முன்பு காபூல் பல்கலைக்கழகத்தில் 4ஆயிரம் மாணவிகள் இருந்தனர். தலிபான்கள் பெண்கள் மீது கடுமையான கட்டுப்பாடுகளை விதிக்கும் வரை மனிதாபிமான நிவாரண அமைப்புகளில் மிகப் பெரியளவில் பெண்கள் இயங்கினர்.

திருமணம், விவாகரத்து, சொத்து உரிமைகள் போன்ற பகுதிகளில் பெண்களின் உரிமைகளை வரையறுக்கும் குறிப்பிட்ட ஏற்பாடுகளை இஸ்லாம் கொண்டுள்ளது. உலக முஸ்லிம்கள் நம்பும் இஸ்லாத்தின் பதிப்பை தலிபான்கள் ஆதரிக்கவில்லை. தலிபான் ஆட்சி கொடூரமாகப் பெண்கள், சிறுமிகளை வறுமையில் தள்ளியது. அவர்களின் ஆரோக்கியத்தை மோசமாக்கியது. மேலும், இவற்றிலிருந்து பெண்களை விடுவிக்கக்கூடிய கல்விக்கான உரிமையைப் பறித்தது.

தலிபான்கள் ஆட்சி மக்களின் அனைத்துத் துறைகளையும் முறையாக ஒடுக்கியது மட்டுமல்ல, மிக அடிப்படையான தனிநபர் உரிமைகளைக்கூட மறுத்தது. பொது இடங்களில் பெண்களுக்கான கழிப்பிடங்களுக்கான தடை முதல் சீருடையில் இருந்த பாடசாலை மாணவிகள் மீதே அமிலத் தாக்குதல்கள் வரை கொடூரமாகப் பாய்ந்தன. பெண்கள் நகப்பூச்சு பயன்படுத்துவது, அலங்காரம் செய்வது கூடாது. சத்தமாகப் பேசுதல், சிரித்தல்கூட தண்டனைக்குரிய குற்றங்கள். பெண்களின் உரிமைகளுக்கு எதிரான வன்முறைகள், சுரண்டல்களுக்கு நீதியைப் பெறுவது முடியாத காரியம். விவாகரத்துக் கோரி வழக்குப் பதிவுசெய்த பெண்கள் பலர் சிறைச்சாலைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர். அமிலத் தாக்குதல்கள், பொதுவில் நிறுத்திக் கசையடித்தல், தண்டித்தல் போன்றன மிகச் சாதாரணமான தண்டனை முறைகள்.

குழந்தைகள் உட்பட அனைவருக்கும் காற்றாடி விடவோ, பாடல்கள் பாடவோ தடை. வெள்ளைக் காலணி அணிந்ததற்காக ஏழு வயதுச் சிறுமியின் கால் அடித்து நொறுக்கப்பட்டது. இசை இல்லை. இசைக்கருவிகள் இல்லை. தொலைக்காட்சி இல்லை. மட்டுப்படுத்தப்பட்ட இணைய வசதிகள். நடைபாதைகளில் உரையாடல் இல்லை. எந்தவித பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளும் இல்லை. பூங்காக்கள் இல்லை. விளையாட்டு மைதானங்கள் இல்லை. விளையாட்டுக்கள் இல்லை. தூசி நிறைந்த தெருக்களும் உள்ளேயும் வெளியேயும் அஞ்சும் மக்களுமே எஞ்சியுள்ளனர்.

பளபளப்பான பழுப்பு நிற கேசட் நாடாக்கள் மரங்களிலும் கம்பிகளிலும் தொங்கி அசைவது தலிபான்களின் கடந்த கால ஆட்சியில் தவிர்க்க முடியாத குறியீடாக இருந்தது. காபூலின் காஜி ஸ்டேடியம் வெள்ளிக்கிழமை ஜும்ஆ பிரார்த்தனைக்குப் பிறகு பொது மரணதண்டனைகளுக்கான களமாக மாற்றப்பட்டது. தலிபான் அதிகாரிகள் புல்டோசர் அல்லது டாங்கிகளைப் பயன்படுத்தி, தன்பாலின உறவாளர்கள் என்று குற்றம்சாட்டப்பட்ட ஆண்கள் மீது சுவர்களை இடித்தனர். திருடியவர்கள் கையை வெட்டினார்கள். குற்றம்சாட்டப்பட்ட பாலியல் தொழிலாளர்கள் கல்லால் அடித்துக் கொல்லப்பட்டனர்.

தலிபான்கள் முதன்முதலில் 1994களிலேயே முக்கியத்துவம் பெற்றனர். பாகிஸ்தான், சவுதி அரேபியா போன்ற மதவாத நாடுகளின் பலமான ஆதரவுடன் மிக விரைவாக முன்னேறி 1996இல் ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலைக் கைப்பற்றினார்கள். ஆரம்பத்தில், தலிபான்கள் நாட்டுக்கு ஸ்திரத்தன்மையை வழங்குவார்கள் என்று சிலர் நம்பினார்கள். ஆனால், விரைவில் இஸ்லாமிய சட்டம் என்ற பதாகையுடன் கடுமையான அடக்குமுறை உத்தரவுகளை விதித்தனர்.

பாலியல் பலாத்காரம், கடத்தல், கட்டாயத் திருமணம் உள்ளிட்ட பெண்களுக்கு எதிரான கொடூரமான செயல்களில் தலிபான்கள் ஈடுபட்டனர் அல்லது அவற்றுக்கு ஆதரவாகச் செயல்பட்டனர். ஆப்கானிஸ்தானின் நீண்ட உள்நாட்டுப் போரின்போது கணவர்களையும் மற்ற ஆண் உறவினர்களையும் இழந்த சுமார் 50ஆயிரம் பெண்களுக்கு எந்த வருமான ஆதாரமும் இல்லாதபோதும் அவர்களைப் பிச்சையெடுக்கவும் முடியாதவர்களாக்கினார்கள். 1996 செப்டெம்பரில் தலிபான்கள் காபூலைக் கைப்பற்றியபோது காபூல் பல்கலைக்கழகத்தில் 4 பெண்களே இருந்தனர், ஆனால், 2021இல் தலிபான்கள் காபூலைக் கைப்பற்றியபோது அங்கு பயின்ற 22 ஆயிரம் மாணவர்களில் 43 வீதம் பேர் பெண்கள்.


2001இல் தலிபான்கள் ஆட்சி வீழ்த்தப்பட்ட பின்பு, அதிலிருந்து 2021 வரையான 20 வருட காலங்களில் ஆப்கானிஸ்தான் அரசின் கட்டுப்பாட்டிலுள்ள நகரங்களில் இலட்சக்கணக்கான பெண்கள் பாடசாலைகளுக்கு சென்றுள்ளனர். ஆப்கானிஸ்தான் வரலாற்றில் முன்னெப்போதையும்விட அதிக அளவில் அரசியல் பதவிகளை வகிப்பது உட்பட பொது வாழ்விலும் பல்வேறு அரசியல் தனியார் துறைகளிலும் பெண்கள் கால்பதித்திருந்தனர்.

தலிபான்கள் பொறுப்பேற்றபோது வங்கிகள், அலுவலகங்கள், பல்கலைக்கழகங்களில் பணியில் இருந்த ஆசிரியர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள், எழுத்தாளர்கள் போன்ற பெண் பணியாளர்களை துப்பாக்கி முனையில் வீடுகளுக்கு அனுப்பிவைத்தது தான், கைப்பற்றிய நகரங்களில் முதலில் நடந்த காரியங்கள். தலிபான்கள் அரசாங்கத்தில் பெண்கள் இல்லை. அவர்களின் நிர்வாகத்துறை, பொதுத்துறை, நீதித்துறை எதனிலும் பெண்கள் இல்லை.

கடந்த 20 ஆண்டுகளில் ஆப்கானிஸ்தானில் ஏற்பட்டுவந்த குறிப்பிடத்தக்க முன்னேற்றம் வெறும் சில வாரங்களில் யாரும் எண்ணிப் பார்க்க முடியாத வேகத்தில் தலைகீழாக மாறியிருக்கிறது. கடந்த 20 ஆண்டுகளில்கூட ஆப்கானிஸ்தானில் பெண்களின் வாழ்க்கை எளிதாக இருந்ததில்லை. அரசுக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் நிகழ்ந்தாலும் தலிபான்கள் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலுள்ள பெண்கள் வழக்கமான தடை நடவடிக்கைகளால் உரிமைகள் மறுக்கப்பட்டவர்களாகவே இருந்தனர். இப்போது அவர்களின் வாழ்க்கை உட்பட ஒட்டுமொத்த ஆப்கானிஸ்தான் பெண்களின் வாழ்க்கை மிகவும் துயரமான நிலையை எட்டியுள்ளது.

**- ஸர்மிளா ஸெய்யித் -**

# ஜயந்த கெட்டகொட சபாநாயகர் முன்னிலையில் நாடாளுமன்ற உறுப்பினராக கடமையேற்பு




ஜயந்த கெட்டகொட நாடாளுமன்ற உறுப்பினராக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவின் முன்னிலையில் நேற்று (21) உறுப்புரிமை ஏற்றுக்கொண்டார்.

நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தசநாயக்க முன்னிலையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதிவேட்டில் கையொப்பமிட்டார்.

அஜித் நிவாட் கப்ரால் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து இராஜினாமா செய்தமையினால் ஏற்பட்ட வெற்றிடத்துக்கு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தேசிய பட்டியல் உறுப்பினராக ஜயந்த கெட்டகொட நியமிக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு லும்பினி கல்லூரியின் பழைய மாணவரான ஜயந்த கெட்டகொட கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகத்தின் சினிமா மற்றும் தொலைக்காட்சி தொடர்பான டிப்ளோமாதாரி ஆவார்.

1991 இல் ஐக்கிய தேசியக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி கடுவலை பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவராக தெரிவு செய்யப்பட்ட அவர் 1999 மேல் மாகாண சபைக்கு தெரிவாகினார்.

2000 ஆம் ஆண்டில் முதன்முறையாக நாடாளுமன்றத்துக்குத் தெரிவான கெட்டகொட நேற்றுடன் ஐந்து முறை நாடாளுமன்ற உறுப்பினராக உறுதியுரை செய்துள்ளார்.

# நிவித்திகலையில் சட்டவிரோத மாணிக்கக்கல் அகழ்வு

## 13 பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை





நிவித்திகலை பிரதேசத்தில் அனுமதிப்பத்திரமின்றி சட்டவிரோதமாக மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட 13 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

நிவித்திகலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எரபத்த பிரதேசத்தில் பொலிஸ் விசேட அதிரடிப்படை காவத்தை முகாம் அதிகாரிகளினால் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் போதே அனுமதிப்பத்திரமின்றி மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட இவர்கள் 13 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் போது 03 ஹொயிஸ்டர் இயந்திரங்கள் மற்றும் கம்பேஷர் இயந்திரம் என்பன இவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளன. சந்தேகநபர்கள் 13 பேரும் கைப்பற்றப்பட்ட பொருட்களுடன் இரத்தினபுரி மாணிக்கக்கல் மற்றும் தங்க ஆபரணங்கள் அதிகார சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

நிவித்திகலை மற்றும் இரத்தினபுரி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 28 தொடக்கம் 58 வயதுக்கிடைப்பட்டவர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# முறையின்றி கழிவுகளை அகற்றுவதால் கொழும்பிலுள்ள நீர்க்குழாய்களில் அடைப்பு

## நிலைமையை சீர் செய்ய அசௌகரியப்படும் பணியாளர்கள்







அண்மையில் குணசிங்கபுர பிரதான வீதியில் எடுக்கப்பட்ட படங்கள்

(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

கழிவுப் பொருட்கள் கழிவு நீர்க் குழாய்களை அடைப்பதால் கொழும்பு நகரை நாளாந்தம் சுத்தம் செய்யும் சுத்திகரிப்பு தொழிலாளர்களுக்கு, அவர்களின் நாளாந்த பணிகளுக்கு பாரிய நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது.

கொழும்பிலிருந்து வெளியாகும் கழிவு நீர் நிலக்கீழ் குழாய்கள் மூலமே அகற்றப்படுகின்றன. இவ்வாறான நிலக்கீழ் குழாய்களுக்கு அதிகமானவர்கள் பொறுப்பற்ற விதத்தில் பொலித்தீன் பைகள், பிளாஸ்ரிக் போத்தல்கள், உடைந்த பிளாஸ்ரிக் பாவனைப் பொருட்கள், யோகட் கப்கள், மதுபானப் போத்தல்கள், பாவிக்கப்பட்ட ஆடைகள் என அதிகளவான கழிவுப் பொருட்களை தத்தமது இடங்களிலுள்ள நிலக்கீழ் குழாய்களுக்குள் அகற்றுகின்றனர்.

இதன் காரணமாக நிலக்கீழ் குழாய்கள் குறித்த கழிவுப் பொருட்களால் அடிக்கடி அடைப்படுவதால் கழிவு நீர் பாதையோரங்களிலும், மக்கள் நடமாடும் பகுதிகளிலும் மேல் எழுவதால் டெங்கு உள்ளிட்ட நோய் நிலைமைகளுக்கும் ஆளாக வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமையை அடைகின்றன.

குறிப்பாக இப்பொருட்கள் நிலத்துக்கு கீழ் அடைப்பதால் சுத்திகரிப்பு தொழிலாளர்கள் பாரிய பிரயத்தனம் செய்து அவற்றை அகற்ற வேண்டிய நிலைமைகள் ஏற்படுகின்றன. சுத்திகரிப்புத் தொழிலாளர்களும் மனிதர்கள்தானே என்ற உணர்வாவது மக்கள் மத்தியில் வரவேண்டும் என அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மனித நேயம் கொண்டவர்கள், இவ்வாறான செயல்களில் ஈடுபடுபவர்கள் விடயத்தில் அவதானமாக இருந்து பொலிஸாரிடமாவது அவர்களின் குற்றச் செயல்களை தெரிவித்து மேற்படி தவறான செயல்களை செய்யாது தடுக்க முன்வர வேண்டும்.

# நாடாளுமன்ற உறுப்பினர் மஸ்தானின் இணைப்பாளர் கொரோனாவால் உயிரிழப்பு



(வவுனியா நிருபர்)

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே. காதர் மஸ்தானின் இணைப்பாளர் கொரோனா தொற்றினால் உயிரிழந்துள்ளார்.

வவுனியா, பட்டானிச்சூர் பிரதேசத்தைச் சேர்ந்த சலாஹுதீன் ஹாஜி (சாபு) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

வவுனியாவில் வைத்து இவருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருந்ததுடன் கடந்த ஒரு வாரத்துக்கு மேலாக வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வந்துள்ளார். இந்நிலையில், நேற்று (21) அதிகாலை சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவர், பட்டக்காடு மஸ்ஜிதுல் இலாஹிய்யா ஜும்ஆ பள்ளி வாசல் தலைவரும், பட்டானிச்சூர் மன்பஉல் உலூம் அரபுக் கல்லூரியின் உபதலைவரும், வவுனியா பள்ளிவாசல் குழுவின் பொருளாளரும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே.காதர் மஸ்தானின் இணைப்பாளரும் ஆவார்.

சடலத்தை சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி ஓட்டமாவடிக்கு எடுத்துச் செல்வதற்கான நடவடிக்கைகளை சுகாதாரப் பிரிவினர் முன்னெடுத்துள்ளனர்.

# வவுனியாவில் கிராமசேவகர்கள் நால்வருக்கு கொரோனா தொற்று




(வவுனியா நிருபர்)

வவுனியா மாவட்டத்தில் நான்கு கிராம அலுவலர்கள் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளதாகவும் அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, செட்டிகுளம் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில், ஆண்டியாபுளியங்குளம் கிராம அலுவலர் மற்றும் விடுமுறையிலிருந்த பெண் கிராம அலுவலர் ஆகிய இருவருக்கும் அன்ரிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அந்த பரிசோதனையில் அவர்களுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அத்துடன், வவுனியா வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கனகராயன்குளம் தெற்கு மற்றும் ஊஞ்சல்கட்டி ஆகிய கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்த கிராம அலுவலர்களுக்கு அன்ரிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அந்த பரிசோதனையில் அவர்களுக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு தொற்று உறுதிப்படுத்தப்பட்ட கிராம சேவகர்கள் நால்வரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதுடன் அவர்களுடன் தொடர்பை பேணியவர்களை தனிமைப்படுத்த சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.




தலவாக்கலை இளைஞர்கள் மற்றும் தலவாக்கலை பொலிஸார் இணைந்து நேற்றுமுன்தினம்(20) தலவாக்கலை நகரிலுள்ள யாசகர்களை குளிப்பாட்டி சுத்தம் செய்யும் பணியை மேற்கொண்டனர். இதன்போது அவர்களின் தலைமுடிகளை வெட்டி குளிக்கவைத்து புதிய ஆடைகளை அணிவித்து அவர்களுக்கு உணவுகளும் வழங்கப்பட்டன. இதன்போது எடுக்கப்பட்ட படங்கள். (தலவாக்கலை நிருபர்)

# கொட்டகலையில் சிறுமியின் சங்கிலியை அறுத்தெடுத்த திருடன் மடக்கிப் பிடிப்பு

(கொட்டகலை)

கொட்டகலை நகரில் சிறுமியின் கழுத்திலிருந்த சங்கிலியை அறுத்தெடுத்து தப்பிச் சென்ற திருடனை குறித்த பகுதி மக்கள் மடக்கிப் பிடித்துள்ளனர்.

நேற்று (21) செவ்வாய்க்கிழமை காலை 9 மணியளவில் கொட்டகலை நகரத்தில் சிறுமியின் சங்கிலியை அறுத்தெடுத்து குடியிருப்புப் பகுதியின் வீடொன்றுக்கு அருகில் ஒளிந்திருந்த குறித்த திருடன், அருகிலிருந்த மக்கள் கொடுத்த தகவலை கொண்டு, பொதுமக்கள் உதவியுடன் குறித்த திருடனை மடக்கிப் பிடித்துள்ளனர்.

பிடிபட்ட திருடன் திம்புளை-பத்தனை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதோடு பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளில் குறித்த திருடன் கிரேட்வெஸ்ரன் பகுதியை சேர்ந்தவரெனவும் தெரிய வந்துள்ளது.

அறுக்கப்பட்ட சங்கிலியின் ஒருபகுதி கிடைக்கப் பெற்றுள்ளது. மேலதிக விசாரணைகளை திம்புளை -பத்தனை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# கெக்கிராவையில் ஆறு மதுபானசாலைகளுக்கு பூட்டு

(அநுராதபுரம் நிருபர்)

கெக்கிராவ சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துக்குட்பட்ட ஆறு மதுபான விற்பனை நிலையங்களுக்கு சுகாதார தரப்பினரால் சீல் வைக்கப்பட்டுள்ளதாக கெக்கிராவ பொலிஸார் தெரிவித்தனர்.

இதுதொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கெக்கிராவ நகரிலுள்ள நான்கு மதுபான விற்பனை நிலையங்களுக்கும் மடாடுகம மற்றும் மரதன்கடவள நகரிலுள்ள இரு மதுபான விற்பனை நிலையங்களுக்குமே இவ்வாறு சீல் வைக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் ஒன்றுகூடுவதை தடுக்கும் நோக்கில் தனிமைப்படுத்தும் சட்டத்தின் பிரகாரம் தமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தினை பயன்படுத்தி சுகாதார தரப்பினர் மேற்படி மதுபானசாலைகளுக்கு சீல் வைத்துள்ளதாக கெகிராவ பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.





ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் குவைட் பிரதமர் ஷெய்க் சபா அல் – ஹமாட் அல் – சபாவுக்கும் இடையிலான சந்திப்பு கடந்த 19ஆம் திகதி நியூயோர்க் மென்ஹாட்டனில் இடம்பெற்றது.

# வீதி அபிவிருத்திக்காக பாதையில் கொட்டப்பட்ட கிரவல் மண்ணால் போக்குவரத்து பாதிப்பு

## பிரதேசவாசிகள் அசௌகரியம்





(கிண்ணியா நிருபர்)

கிண்ணியா பிரதேச சபை எல்லைக்குட்பட்ட காக்காமுனை வட்டாரம் 06 பகுதியில் வீதி அபிவிருத்தி என கொட்டப்பட்ட கிரவல் மண்ணால் போக்குவரத்து தடைப்படுவதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

குறித்த வீதியில் கொட்டப்பட்ட கிரவல் குவியல்கள் ஒரு கிழமையையும் தாண்டி அகற்றப்படாமலும் இதனை செப்பனிடுவதற்கு பயன்படுத்தாமலும் உள்ளது. இந்நிலையில் அதனூடாக போக்குவரத்து செய்வதில் பல சிக்கல்களை எதிர்நோக்குவதாக அதனூடாக பயணிப்போர் சுட்டிக்காட்டுகின்றனர்.

காக்காமுனை ஆறாம் வட்டார பிரதான பள்ளிவாயல் வீதி மற்றும் அதனை அண்டிய உள் ஒழுங்கை வீதிகளிலேயே இவ்வாறு கிரவல் குவியல் கொட்டப்பட்டுள்ளது. ஒரு கிழமைக்கும் அதிகமாக வீதியில் கிரவல் மண் கிடப்பதனால் இப் பகுதி ஊடான நடமாடும் வியாபாரிகள் அவ்வீதியை விட்டு மாற்று வீதிக்கு செல்லும் நிலை காணப்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

அப்பகுதியில் கட்டிட வேலைக்காக பயன்படுத்தப்படும் பொருட்களை கொண்டு சேர்க்க முடியாமல் பிரதேசவாசிகள் பல இன்னல்களுக்கு முகங்கொடுப்பதாக தெரிவிக்கின்றனர். எனவே உரிய கொந்தராத்துக்காரர் மற்றும் அரச அதிகாரிகள் கவனம் செலுத்துமாறும் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# சடலமாக மீட்கப்பட்ட முச்சக்கரவண்டி சாரதிக்கு பரிசோதனையில் கொரோனா

(திருகோணமலை நிருபர்)

திருகோணமலை தலைமையக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாலையூற்று பிரதேசத்தில் முச்சக்கரவண்டி சாரதி ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் (20) அதிகாலை இடம்பெற்றுள்ளதாக தெரியவருகிறது.

திருகோணமலை பாலையூற்று பிரதேசத்தில் தனது மனைவியின் வீட்டுக்கு வந்திருந்த நிலையில், முச்சக்கரவண்டியில் நேற்று முன்தினம் காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

திருகோணமலை சிங்கபுர பிரதேசத்தைச் சேர்ந்த ரவீந்திர வீரசிங்க (வயது 42) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் அவருக்கு மேற்கொண்ட அன்ரிஜன் பரிசோதனையில் கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளதாக உப்புவெளி பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

மேலும் அவருடன் தொடர்பைப் பேணி வந்த நபர்கள் அனைவரும் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கிண்ணியா துவரங்குளம் அடைமழையால் சேதம்





(கந்தளாய் நிருபர்)

திருகோணமலை மாவட்டத்தில் கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள துவரங்குளம் பகுதியில் அண்மையில் பெய்த கடும் மழையால் குளத்தின் இரு பக்கங்களும் அரிப்புக்குள்ளாகியுள்ளதாக பிரதேசவாசிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இக் குளம் கிண்ணியா பிரதேசத்தில் நடுஊற்று, மற்றும் சூரங்கல், ஆயிலியடி ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் மையப்பகுதியில் அமைந்துள்ளது.

இக்குளம் கடந்த ஓரிரு தினங்களுக்கு முன்னரே கொந்தரத்துக்காரர்களால் மீள் நிர்மாணப் பணிகள் முன்னெடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இத் துவரங்குளத்தின் தற்போதைய நிலையில் இதனது நிர்மாண வேலைகள் முடிவடைந்து விட்டதா? இல்லை என்றால் இதற்காக ஒதுக்கப்பட்ட நிதி மக்களுக்கு பயனுள்ளதாக அமைந்துள்ளதா? இந்த குளம் வருகின்ற மழை காலத்தில் அழிந்து விடாமல் நிலையாக இருக்குமா? இக் குளத்தை சுற்றியுள்ள மக்களின் வாழ்வாதாரம் எவ்வாறு இருக்கப்போகின்றது? என மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

# புல்மோட்டையில் திருட்டு சம்பவத்தில் கைதான இருவருக்கு 29 ஆம் திகதிவரை விளக்கமறியல்

(கந்தளாய் நிருபர்)

திருகோணமலை புல்மோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பல்வேறு திருட்டுச் சம்பவங்கள் தொடர்பில் கைதான இரண்டு சந்தேக நபர்களை எதிர்வரும் 29 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை நீதிமன்ற பதில் நீதிவான் நேற்றுமுன்தினம் (20) உத்தரவிட்டார். புல்மோட்டை தக்குவா நகர் மற்றும் சதாம் நகர் பகுதியைச் சேர்ந்த 25 மற்றும் 21 வயதுடைய இருவரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் இருவரும் புல்மோட்டை பகுதியில் மூன்று அலைபேசிகள், மூன்று நீர் இறைக்கும் மோட்டார் இயந்திரங்கள் மற்றும் கடைகளை உடைத்து திருடியமை போன்ற குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் கைதுசெய்து, புல்மோட்டை பொலிஸார் திருகோணமலை நீதிமன்ற பதில் நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்திய போதே விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# ஏறாவூரில் 7,500 மில்லி லீற்றர் கசிப்புடன் ஒருவர் கைது



(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு ஏறாவூர் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புன்னக்குடாவில் சட்டவிரோதமான முறையில் கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட ஒருவரை மாவட்ட குற்றவிசாரணைப் பிரிவினர் கைதுசெய்துள்ளதாக மாவட்ட குற்றவிசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி ஐ.பி.பண்டார தெரிவித்தார்.

பொலிஸாருக்கு நேற்று முன்தினம் (20) மாலை கிடைக்கப்பெற்ற தகவலொன்றின் பேரில் குறித்த பிரதேசத்தில் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் 7ஆயிரத்து 500 மில்லி லீற்றர் கசிப்புடன் குறித்த நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதான நபர் ஏறாவூர் சுற்றுலா நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# ஹொரவப்பொத்தானையில் ஆணொருவர் சடலமாக மீட்பு

(திருகோணமலை நிருபர்)

ஹொரவப்பொத்தானை குளத்தில் உயிரிழந்த நிலையில் ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குளத்தில் சடலமொன்று மிதப்பதாக பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலையடுத்து, குறித்த சடலம் பொலிஸாரால் மீட்கப்பட்டு, பிரேத பரிசோதனைக்காக அநுராதபுரம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு உயிரிழந்தவர் ஹொரவப்பொத்தானை - கம்மெத்த, கம்மானய பகுதியைச் சேர்ந்த ரன்ஹாமிகே வணிகசேகர (62 வயது) எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் குறித்து தெரியவருவதாவது, இவர் இக்குளத்தில் தொடர்ச்சியாக மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதுடன், சில நேரங்களில் மது அருந்துவதாகவும் ஆரம்பகட்ட விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

ஆனாலும் இவருடைய மரணத்துக்கான காரணம் இன்னும் கண்டறியப்படவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மீட்கப்பட்ட குறித்த சடலத்தை பிரேத பரிசோதனைக்காக அநுராதபுரம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ள நிலையில் பிரேத பரிசோதனை முடிவடைந்தவுடன் உறவினர்களிடம் ஒப்படைக்கவுள்ளதாகவும் மரணத்திற்கான காரணம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் ஹொரவப்பொத்தானை பொலிஸார் தெரிவித்தனர்.

# வேறுவகை தடுப்பூசிக்காக சிலர் காத்திருப்பது பஸ்ஸை ஓடவிட்டு கையை காட்டுவது போன்றது

## காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் தஸ்ஸீமா வசீர்



(நூருல் ஹுதா உமர்)

சினோபார்ம் தவிர்த்து வேறு தடுப்பூசியை ஏற்றுவது தொடர்பில் இன்னும் நிச்சயிக்காத நிலையில் கையிலிருக்கும் தடுப்பூசியை தவறவிட்டு வேறு ஒரு தடுப்பூசியை பெற காத்திருப்போரின் நிலை பஸ்ஸை ஓடவிட்டு பின்னர் கையை காட்டும் நிலைக்கே சென்றுவிடும். கைவசமிருக்கும் தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ள இளைய சமுதாயம் முன்வர வேண்டும். நாட்டில் வேகமாக பரவிவரும் கொரோனா அலையிலிருந்து எம்மை நாம் பாதுகாத்துக்கொள்ள வேண்டும். அனைவரும் தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ள வேண்டியது காலத்தின் கட்டாயமாகும் என காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் தஸ்லிமா பசீர் தெரிவித்தார்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஜீ.சுகுணனின் வழிகாட்டலில் காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி தஸ்லிமா பசீர் தலைமையில் மேற்பார்வை பொது சுகாதாரப் பரிசோதகர்கள், குடும்ப நல உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பிரதேச சபை நுளம்பு கள தடுப்பு பிரிவினர் இணைந்து 20 தொடக்கம் 29



வயதானவர்களுக்கு கொவிட்-19 முதலாம் கட்ட தடுப்பூசியை 04 நிலையங்களில் முன்னெடுத்தனர்.

இதன்போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகப் பிரிவில் 20 தொடக்கம் 29 வயதானவர்களுக்கு வழங்கப்பட்டுவரும் தடுப்பூசியேற்றலில் 330 பேர் நேற்று தடுப்பூசியினை பெற்றுள்ளனர்.

# கந்தளாய் – வட்டுக்கச்சி பகுதியில் கஞ்சா செடிகளை வளர்த்தவர் கைது

(கந்தளாய் நிருபர்)

கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வட்டுக்கச்சி பகுதியிலுள்ள வீடொன்றில் சட்டவிரோதமான முறையில் கஞ்சா செடிகளை வளர்த்த நபரொருவரை (40 வயது) நேற்று (21) கந்தளாய் பொலிஸார் கைதுசெய்துள்ளதாக தெரிவிக்கின்றனர்.

இதன்போது குறித்த வீட்டின் பின் பக்கமாக உள்ள காணியில் மூன்று கஞ்சா செடிகள் கண்டுபிடிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேகநபர் வீட்டில் கஞ்சா செடிகளை வளர்த்து வருவதாக கந்தளாய் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் வீட்டின் காணியை சோதனைக்கு உட்படுத்தியபோதே கஞ்சாசெடிகள் நடப்பட்டிருந்தமை கண்டறியப்பட்டதாகவும் கந்தளாய் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேகநபரை தடுத்துவைத்துள்ளதோடு, கந்தளாய் நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்த உள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# யுத்த விதிமுறைகளை மீறிய இலங்கை மீது சர்வதேச அரசுகள் நடவடிக்கை எடுக்கத் தயங்குவது ஏன்?

## ஜனநாயகப் போராளிகள் கட்சியின் பொதுச் செயலாளர் கதிர் கேள்வி

(ந.குகதர்சன்)

யுத்த விதிமுறைகளை மீறிய இலங்கை அரசு மீது பன்னாட்டு சமூகம் சரியான முறையிலே நடவடிக்கை எடுப்பதற்குத் தயங்குவது ஏன்? தொடச்சியாக இவ்வாறான நிலைப்பாட்டில் இருந்து மௌனம் காக்காது, நேரடியாக இலங்கை மீது சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முன்வரவேண்டும் என ஜனநாயகப் போராளிகள் கட்சியின் பொதுச் செயலாளர் இ.கதிர் தெரிவித்துள்ளார்.

ஐ.நாவின் 48ஆவது கூட்டத்தொடர் மற்றும் சர்வதேச நீதி விசாரணையின் தற்போதையை நிலைமை தொடர்பில் ஜனநாயகப் போராளிகள் கட்சியின் நிலைப்பாடு குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐ.நாவின் 48 ஆவது கூட்டத் தீர்மான வரைபில் இலங்கை தொடர்பான விடயங்கள் கையாளப்பட்டுள்ளன. இதில் தமிழர் தொடர்பான விடயங்களில் தமிழ்த் தரப்பு அரசியல்வாதிகள் தங்கள் கட்சி அரசியலை முன்னெடுத்து வருகின்றார்கள். 2009ஆம் ஆண்டு யுத்தம் நிறைவுற்றதன் பின்னர் பன்னாட்டு சமூகத்தால் முன்னெடுக்கப்பட்ட நீதி விசாரணைகள் தொடர்பான பரிந்துரைகள் யாவும் எமது மக்கள் நலன் சார்ந்த விடயங்களில் முழுமைப்பெறவில்லை என்பதோடு அவை வெறுமனே இலங்கை அரசாங்கத்தை அச்சுறுத்தும், அடிபணிய வைக்கும் செயற்பாடுகளாகவேதான் இருக்கின்றன.

இலங்கையில் முப்பது ஆண்டுகால யுத்தம் தோன்றியது ஏன்? யுத்தத்தின் பின்னரும் தமிழர்களின் சுயநிர்ணய உரிமை பறிக்கப்பட்ட நிலையிலும், இலங்கை அரசினால் கட்டவிழ்த்து விடப்பட்ட நடவடிக்கைகளும் தொடர்ந்தும் இடம்பெற்றுக்கொண்டே இருக்கின்றன. யுத்தத்திற்கு முற்பட்ட தந்தை செல்வாவின் காலத்தில் இனப்படுகொலைகள், கல்வித் தரப்படுத்தல் சட்டம், தமிழர்களின் வரலாற்று மையங்களை அழித்தல், தமிழர்களின் சுயநிர்ணய உரிமை பறிக்கப்பட்டமை போன்றவை காரணமாகவே ஜனநாயக வழிப் போராட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. அந்த ஜனநாயகவழிப் போராட்டத்தின் அதியுச்சமே ஆயுதப் போராட்டமாக மாறியது.

அதன்பின்னர் முப்பது ஆண்டு கால யுத்தத்தில் பாடசாலைகள், வைத்தியசாலைகள் போன்ற பொதுக் கட்டிடங்கள், பொதுமக்கள், சிறுவர்கள் மீதான குண்டு வீச்சுகள், படுகொலைகள், ஆட்கடத்தல், பாலியல் ரீதியாகப் பெண்களைத் துன்புறுத்தல் என ஜனநாயக மீறல்கள், சர்வதேச யுத்த விதிமுறைகளை மீறியது இலங்கை இராணுவம் என்பது வரலாற்று உண்மை. ஆயுதப் போராட்டத்திற்காக யுத்த விதிமுறைகளை மீறிய இலங்கை அரசு மீது பன்னாட்டு சமூகம் சரியான முறையிலே நடவடிக்கை எடுப்பதற்குத் தயங்குவது ஏன்?



2009ஆம் ஆண்டு முள்ளிவாய்க்காலிலே பல்லாயிரக்கணக்கான மக்கள் இலங்கை இராணுவத்தால் கொல்லப்பட்டனர். உலகத்தில் தடைசெய்யப்பட்ட இரசாயன ஆயுதங்கள் பாவிக்கப்பட்டு எமது மக்கள் கொலைசெய்யப்பட்டனர். இதற்கான அனைத்து ஆதாரங்கள், ஆவணங்கள் ஐ.நா. சபையிடம் உள்ளன. போரிலே சரணடைந்த போர்க் கைதிகள், போராளிகள், காணாமல் ஆக்கப்பட்டோர் உள்ளிட்ட விபரங்களும் ஐ.நா. சபையிடம் இருக்கின்றது. இந்த ஐ.நா சபை தொடர்ச்சியாக இது தொடர்பில் இலங்கை அரசிற்கு எவ்விதமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாது, இலங்கை அரசின் மீது நம்பிக்கை கொண்டு தமிழர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு முயற்சிக்கின்றது.

இது உண்மையிலேயே எங்களுக்கு ஏமாற்றத்தை அளிக்கும் விடயமாகவே இருக்கின்றது. சர்வதேச ரீதியான ஒரு பொறிமுறையை உருவாக்கி தமிழ் மக்களுக்கான ஒரு நீதி விசாரணை இடம்பெற்று, குற்றமிழைத்தவர்களுக்குத் தண்டனை வழங்கப்பட்டு, எமது மக்களுக்கான நீதி கிடைக்க வேண்டும் என எமது மக்கள் பல ஆண்டுகளாகக் காத்து நிற்கின்றனர். ஒவ்வொரு ஆண்டும் எமது மக்கள் ஐ.நாவின் மீது மிகுந்த நம்பிக்கையுடன் தேடி ஓடுகின்றனர். ஆனால் அங்கு சரியான முறையில் நடவடிக்கைகள் இடம்பெறுகின்றனவா? மக்கள் எதிர்பார்க்கின்ற விடயங்கள் நடக்கின்றனவா? என்பதெல்லாம் மக்கள் மத்தியில் இன்னும் கேள்வியாகவே இருக்கின்றது.

போரினால் பாதிக்கப்பட்ட, காணாமல் ஆக்கப்பட்ட, மறுவாழ்வளிக்கப்பட வேண்டிய எமது சமூகம் பொருளாதார ரீதியாக சந்திக்கின்ற நெருக்கடிகள், முன்னாள் போராளிகளின் சமூக ரீதியான தேவைகள், அவர்கள் மீதான அச்சுறுத்தல்கள் போன்றன தொடர்பில் அரச தரப்போ, பன்னாட்டு சமூகமோ நேரடியாக எம்மோடு பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு அது தொடர்பில் உண்மைகளைக் கண்டறிந்து செயற்படுவதற்கு முன்வர வேண்டும். ஆனால் மாறாக, இன்றும் தொடர்ச்சியாகப் போராளிகள் அச்சுறுத்தல்களுக்கு உள்ளாக்கப்படுகின்றார்களே தவிர எந்தவிதமான சமரச முயற்சிகளிலும் இலங்கை அரசு ஈடுபடவில்லை.

சர்வதேசமோ இலங்கை அரசை நம்பி தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண நினைக்கின்றது. தமிழர்களுக்கு குறைந்த பட்ச அதிகாரமுள்ள இந்திய அரசின் அனுசரணையுடன் கொண்டு வரப்பட்ட 13ஆவது திருத்தச் சட்டத்திலுள்ள மாகாணசபை அதிகாரங்களைக் கூட பகிர்ந்தளிக்க முடியாத இந்த பேரினவாத அரசாங்கம் புதிய அரசியலமைப்பை மாற்றம் செய்து தனிச் சிங்கள சட்டத்தைக் கொண்டு வந்து தமிழினத்தை அடக்கி ஆள நினைக்கின்றது. இந்த அரசிடமிருந்து எமது இனத்திற்கான எவ்வித உரிமையையும் பெற்றுக்கொள்ள முடியாது – என்றார்.

## தனிப் பெரும்பான்மையை இழந்தது லிபரல் கட்சி:

# 3ஆவது முறையாகவும் கனேடிய பிரதமராகிறார் ஜஸ்டின் ட்ரூடோ






கனடாவில் நடந்து முடிந்த பொதுத்தேர்தலில் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தலைமையிலான லிபரல் கட்சி 3ஆவது முறையாக வெற்றி பெற்றுள்ளது. அதேநேரம் நாடாளுமன்றத்தில் லிபரல் கட்சி பெரும்பான்மை இடங்களில் வெல்லவில்லை.

கனடாவில் 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை பொதுத்தேர்தல் நடத்தப்படுவது வழக்கம். கடந்த 2019 நடைபெற்ற தேர்தலில் எந்தக் கட்சிக்கும் தனிப்பெரும்பான்மை கிடைக்கவில்லை. இதனால் தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்த ஜஸ்டின் ட்ரூடோவின் லிபரல் கட்சி, கனடாவில் ஆட்சி அமைத்தது. இந்நிலையில் கனடா நாடாளுமன்றம் பதவிக்காலம் முடிவடைய இன்னும் 2 ஆண்டுகள் உள்ள போதும், பெரும்பான்மையை அடைவதற்காக இடைத்தேர்தலுக்கு பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அழைப்பு விடுத்தார்.

அதன்படி கடந்த ஓகஸ்ட் 15ஆம் திகதி நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு 338 தொகுதிகளுக்கான தேர்தல் நேற்றுமுன்தினம் (செப்டெம்பர் 20ஆம் திகதி) நடைபெற்றது.

இதில் லிபரல் கட்சி சார்பில் ஜஸ்டின் ட்ரூடோ, கன்சர்வேட்டிவ் கட்சி சார்பில் எரின் ஓ டூல் களமிறங்கினர்.

கனடா பொதுத்தேர்தல் நேற்றுமுன்தினம் நடந்து முடிந்த நிலையில், நேற்று தேர்தல் முடிவுகள் வெளியாகின. தனிப் பெரும்பான்மைக்கு மொத்தம் 170 இடங்கள் தேவைப்பட்ட நிலையில், ஜஸ்டின் ட்ரூடோ தலைமையிலான லிபரல் கட்சி 158 இடங்களைக் கைப்பற்றி 3ஆவது முறையாக ஆட்சியை பிடித்துள்ளது. எனினும் இந்த முறையும் அந்த கட்சிக்கு பெரும்பான்மை கிடைக்கவில்லை.

கன்சர்வேடிவ்(Conservatives) கட்சி 121 இடங்களிலும் முன்னிலையில் உள்ளது. க்யூபொகோயிஸ் (Quebecois) கட்சி 34 இடங்களிலும், புதிய ஜனநாயகக் கட்சி (New Democrats) 25 இடங்களிலும் வெற்றிப் பெற்றன.

நடந்து முடிந்த தேர்தல் பெறுபேறுகளின் படி பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தலைமையிலான லிபரல் கட்சி 3ஆவது முறையாக வெற்றிப் பெற்றுள்ளது.

2015இல் முதன்முறையாக தனிப் பெரும்பான்மையுடன் அவர் பிரதமரானார். அதன்பிறகு 2019இல் நடந்த தேர்தலில் பெரும்பான்மைக்குத் தேவையான 170 இடங்கள் கிடைக்காமல், 158 இடங்களை மட்டுமே கைப்பற்றினாலும் வேறு கட்சிகளின் ஆதரவுடன் அவர் இரண்டாவது முறையாக பிரதமரானார்.

தற்போது கொரோனாவை சிறப்பாக கட்டுப்படுத்தி உலகிலேயே சிறந்த முறையில் தடுப்பூசி திட்டத்தை மேற்கொண்ட நிலையில், 2023இல் நடக்க வேண்டிய தேர்தலை முன்னதாகவே அவர் நடத்தினார். கொரோனாவை சிறப்பாக கையாண்டதால் தனிப்பெரும்பான்மை கிடைக்கும் என அவர் எதிர்பார்த்தது நடக்கவில்லை என்றும் தனிப்பெரும்பான்மை கிடைக்கவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

பெரும்பான்மைக்கான 170 இடங்களில் 158 இடங்களை மாத்திரமே பெற்றுள்ள நிலையில் எஞ்சிய இடங்களை பெற ட்ரூடோ கூட்டணி கட்சிகளின் ஆதரவை பெற வேண்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

உலக செய்திகள்

# குமுறும் லா பல்மா எரிமலை







## அட்லாண்டிக் பெருங்கடலை நோக்கி பெருக்கெடுக்கும் லாவா குழம்பு

ஸ்பெயினின் லா பல்மா எரிமலை வெடித்து சிதறிய நெருப்பு குழம்பு கக்கிவரும் நிலையில், அப்பகுதியிலுள்ள 166 வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளதுடன் அப்பகுதியிலிருந்து சுமார் 6ஆயிரம் பேர் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டுள்ளனர்.

இதேவேளை, எரிமலையில் வடக்கு முனை பகுதியில் புதிய வெடிப்பொன்று ஏற்பட்டு அப்பகுதி லாவா குழம்பு வெளியேற்றப்பட்டு வரும் நிலையில் நேற்று அப்பகுதியில் 3.4 ரிச்டர் அளவில் நிலநடுக்கமும் ஏற்பட்டுள்ளதாக அந்நாட்டு தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஸ்பெயினில் வெடித்து சிதறியுள்ள லா பல்மா எரிமலையால் நூற்றுக்கணக்கான வீடுகள் சேதமடைந்தன. கனரி தீவிலுள்ள லா பல்மா எரிமலை, 50 ஆண்டு இடைவெளிக்குப் பின் தீக் குழம்புகளைக் கக்கி வருகிறது.

வெடித்து சிதறிய எரிமலையிலிருந்து வெளியேறிய தீப்பிழம்புகள் ஆட்லாண்டிக் பெருங்கடலை நோக்கி ஆறாக பெருக்கெடுத்து ஓடுகிறது. வழி நெடுகேயுள்ள காடுகளும், நூற்றுக்கணக்கான வீடுகளும் தீப்பிழம்புகளுக்கு இரையாகின. எரிமலை வெடிப்பதற்கு முன்பே 5ஆயிரத்து 500 பேர் வீடுகளை விட்டு வெளியேற்றப்பட்டதால் உயிர்ச்சேதம் தவிர்க்கப்பட்டது.

ஒருபுறம், மக்கள் வெளியேற்றப்பட்டாலும், வெடித்து சிதறும் எரிமலையை ரசிக்க ஏராளமானோர் கனரி தீவுக்கு வரக்கூடும் என்பதால் சுற்றுலா சார்ந்த துறைகளில் ஈடுபட்டுள்ளவர்கள் இதனை சிறந்த வாய்ப்பாக பயன்படுத்தி கொள்ளுமாறு சுற்றுலாத்துறை அமைச்சர் ரெயெஸ் அறிவுறுத்தியுள்ளார்.

**“166 வீடுகள் நாசம்; 6000பேர் வெளியேற்றம்”**

**“தொடச்சியாக 4,222 நிலநடுக்கங்கள் பதிவு”**

**தொடர்ச்சியான நிலநடுக்கங்கள்:**

ஸ்பெயினிலுள்ள லா பால்மாவின் கேனரி தீவின் தெற்கேயுள்ள டெனிகுவியா எரிமலையைச் சுற்றியுள்ள கும்ப்ரே விஜா தேசியப் பூங்காவில் 4ஆயிரத்து 222 நிலநடுக்கங்கள் பதிவாகியுள்ளதாக அந்நாட்டின் தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்நிலநடுக்கங்களே எரிமலை வெடித்து சிதறக் காரணம் என தெரிவிக்கப்படுகிறது. மேலும் சில நாட்களில் நிலநடுக்கங்களின் எண்ணிக்கை அதிகரிக்க வாய்ப்புள்ளது என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## தலிபான்களிடையே வெடிக்கும் அதிகார மோதல்:

# தலைவர் அகுண்ட்ஜாடா சுட்டுக்கொலை? துணை பிரதமர் முல்லாஹ் பராதர் சிறைப்பிடிப்பு

## பிரிட்டன் பத்திரிகை அதிர்ச்சி தகவல்

ஆப்கானிஸ்தானில் அரசமைப்பதற்கு முன்னர், தலிபான்களுக்கிடையே அதிகார மோதல் வெடித்துள்ள நிலையில், புதிய அரசின் துணை பிரதமராக தெரிவு செய்யப்பட்டுள்ள முல்லா பராதர் பணயக் கைதியாக பிடித்து வைக்கப்பட்டிருந்ததாகவும், அந்த அமைப்பின் தலைவரான ஹைபத்துல்லாஹ் அகுண்ட்ஜாடா உயிரோடு இருக்கிறாரா என்பதே சந்தேகம் என்றும் பிரிட்டன் பத்திரிகையான The Spectator செய்தி வெளியிட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானில் ஆட்சியைக் கைப்பற்றிய பின்னர், யாருக்கு எந்த பதவி என்ற விவகாரத்தில் ஹக்கனி கோஷ்டிக்கும், தற்போது துணைப் பிரதமராகவுள்ள முல்லாஹ் பராதர் கோஷ்டிக்கும் மோதல் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இம்மாத தொடக்கத்தில் ஏற்பட்ட மோதலில் நாற்காலிகளை தூக்கி அடித்ததாகவும், கொதிக்கும் திரவங்கள் இருந்த ஃபிளாஸ்க்குகளை வீசிக் கொண்டதாகவும், ஹக்கனி கோஷ்டி தலைவர் கலீல் ரஹ்மான் ஹக்கனி, இருக்கையிலிருந்து எழுந்து பராதரை தாக்கியதாகவும் The Spectator தெரிவித்துள்ளது.



பராதர்



அகுண்ட்ஜாடா

அப்போது அரசு தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்ட பராதர் வீடியோ உரை, பணயக்கைதியாக பிடித்து வைக்கப்பட்டு எடுத்ததாக இருக்கலாம் என்றும் The Spectator குறிப்பிட்டுள்ளது. இதேபோல, அகுண்ட்ஜாடா எங்கிருக்கிறார் என்பது யாருக்கும் தெரியாத நிலையில், அவர் இறந்திருக்கலாம் என பேச்சுகள் எழுந்திருப்பதாக The Spectator குறிப்பிட்டுள்ளது.

**ஐ.எஸ் தாக்குதல்: 35 தலிபான்கள் பலி**


இதேவேளை, ஆப்கானிஸ்தானில், தொடர் குண்டு வெடிப்புகளில் 35 தலிபான்கள் கொல்லப்பட்டதாக ஐ.எஸ் அமைப்பினர் தெரிவித்தனர்.

தலிபான்களும், ஐ.எஸ் அமைப்பினரும் சன்னி பிரிவைச் சேர்ந்தவர்கள் என்ற போதும் மதம் மற்றும் கொள்கை சார்ந்த முடிவுகளில் ஏற்பட்ட கருத்து வேறுபாடால் மோதல் முற்றியுள்ளது.

கடந்த இரு நாட்களில், ஜலாலாபாத் நகரின் 4 வெவ்வேறு பகுதிகளில் தலிபான்கள் சென்ற வாகனங்களை குறி வைத்து குண்டு வெடிப்புகள் நிகழ்த்தப்பட்டன.

அமெரிக்க படைகள் ஆப்கானை விட்டு வெளியேறிய பின் நிகழ்த்தப்பட்ட மிகப்பெரும் பயங்கரவாதத் தாக்குதலாக இது கருதப்படுகிறது.

4 குண்டு வெடிப்புகளுக்கும் பொறுப்பேற்றுள்ள ஐ.எஸ் அமைப்பினர் இதில் 35இற்கும் மேற்பட்ட தலிபான்கள் கொல்லப்பட்டிருக்கலாம் அல்லது காயமடைந்திருக்கலாம் எனத் தங்கள் Telegram Channelஇல் தெரிவித்தனர்.



## ரஷ்ய நாடாளுமன்றத் தேர்தலில் புட்டினின் கட்சி அபார வெற்றி

ரஷ்யாவின் நாடாளுமன்ற கீழவைக்கான தேர்தலில் ஜனாதிபதி விளாடிமிர் புட்டினின் யுனைடெட் ரஷ்யா கட்சி மீண்டும் பெரும்பான்மை வெற்றியை பெற்று முன்னிலையில் உள்ளது.

ரஷ்யாவின் நாடாளுமன்ற கீழவை தேர்தல் வாக்குப்பதிவு கடந்த 19ஆம் திகதி இடம்பெற்றது. இதில் பதிவான வாக்குகள் எண்ணும் பணி அன்றைய இரவே தொடங்கப்பட்டது. இந்நிலையில் அதன் முடிவுகள் நேற்றுமுன்தினம் முதல் வெளியாகத் தொடங்கியுள்ளன. 85 சதவீத வாக்குகள் எண்ணப்பட்ட நிலையில், புட்டினின் யுனைடெட் ரஷ்யா கட்சி 49.7 சதவீத வாக்குகளுடன் பெரும்பான்மை வெற்றியை உறுதி செய்துள்ளது.

மொத்தமுள்ள 450 இடங்களில் புட்டினின் கட்சி 315 இடங்களை வெல்லும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன் மூலம் நாடாளுமன்றத்தில் மீண்டும் புடினின் கட்சி தனது ஆதிக்கத்தை நிலைநாட்டியுள்ளது.

## சந்திரமுகி 2இல் களமிறங்கும் அனுஷ்கா

சந்திரமுகி இரண்டாம் பாகத்தில் ஜோதிகாவின் வேடத்தில் நடிகை அனுஷ்கா நடிக்கவிருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

பி.வாசு இயக்கத்தில் ரஜினிகாந்த், ஜோதிகா, நயன்தாரா, வடிவேலு உள்ளிட்டோர் நடிப்பில் கடந்த 2005ஆம் ஆண்டு வெளியான படம் சந்திரமுகி. நகைச்சுவை கலந்த திகில் படமாக உருவான இந்தப் படம் ரசிகர்களிடையே மாபெரும் வரவேற்பைப் பெற்றது.

தற்போது இந்தப் படத்தின் இரண்டாம் பாகம் உருவாகிறது. இந்தப் படத்தின் இரண்டாம் பாகத்தில் ரஜினி வேடத்தில் ராகவா லாரன்ஸ் நடிக்கிறார். சந்திரமுகியின் முதல் பாகத்தில் ரஜினிகாந்த் வேடத்தை விட ஜோதிகாவின் வேடத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருக்கும்.

இதனையடுத்து இரண்டாம் பாகத்தில் ஜோதிகாவின் வேடத்தில் நடிப்பது யார் என்ற எதிர்பார்ப்பு ரசிகர்களிடையே எழுந்தது. இந்த நிலையில் ஜோதிகாவின் வேடத்தில் அனுஷ்கா நடிக்கவிருப்பதாக தகவல் கிடைத்துள்ளது.

முன்னதாக சந்திரமுகி திரைப்படத்தில் வேட்டையன் சம்பந்தப்பட்ட காட்சிகள் மிகக் குறைவாகவே இடம்பெற்றிருக்கும். ஆனால், சந்திரமுகி 2வில் முழுக்க முழுக்க வேட்டையன் வேடத்தை மையப்படுத்தியே கதை அமைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.



## கடல்நீரை உறிஞ்சிய மேகங்கள்

மன்னார் வளைகுடா கடற்பகுதியில் கடல்நீரை மேகங்கள் உறிஞ்சி எடுக்கும் அரியக் காட்சிகளை இராமேஸ்வரம் மீனவர்கள் நேரில் பார்த்து ரசித்து வீடியோ எடுத்துள்ளனர்.

தெற்கு மன்னார் வளைகுடா பகுதியில் நேற்று காலை சிறிது நேரம் இந்த அரிய நிகழ்வு தோன்றி மறைந்ததாக மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஒரே நேரத்தில் கடலில் குளிர்ந்த காற்றும், வெப்பமான காற்றும் வீசுவதால் இதுபோன்ற சுழல் தோன்றும் எனவும், பொதுவாக பருவநிலை மாற்றம் ஏற்படும் போது இந்த சுழல் தோன்ற வாய்ப்புள்ளதாகவும் மத்திய கடல் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். பின்னர், இரண்டு வெப்பநிலையும் சம நிலைக்கு வந்துவிட்டால், சுழல் மறைந்துவிடும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.



# கிரிக்கெட்டின் நுணுக்கங்களை விபரித்த மைக்கல் ஹோல்டிங் ஓய்வு



(ரமணி)

மைதானத்தில் நடக்கும் கிரிக்கெட் போட்டியை வர்ணனையால் நமக்குத்தந்த ஜாம்பவான் மைக்கல் ஹோல்டிங் ஓய்வை அறிவித்துள்ளார். 31 ஆண்டுகளாக தொலைக்காட்சியில் கிரிக்கெட் வர்ணனையில் அரியபல நுணுக்கங்களையும், கிரிக்கெட்டின் நுட்பங்களையும் கற்றுக் கொடுத்த மைக்கல் ஹோல்டிங் கடந்த வாரம் கிரிக்கெட் வர்ணனைக்கு பிரியாவிடை கொடுத்தார்.

மேற்கிந்திய தீவுகளின் வேகப்பந்து வீச்சாளரான மைக்கல் ஹோல்டிங் 1987ஆம் ஆண்டு கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்றார். 1990ஆம் ஆண்டு மேற்கிந்திய தீவுகளுக்கு இங்கிலாந்து அணி விளையாடச் சென்றபோது வர்ணனைக்கான மைக்கைப் பிடித்தார். ஆங்கிலத்தில் கிரிக்கெட்டின் நுணுக்கங்களை மிக அழகாக விவரிப்பார். வர்ணனைப் பிரியர்களுக்கு இது ஒரு பெரிய இழப்புதான்.

ஸ்கை ஸ்போர்ட்ஸ் வர்ணனைக் குழுவில் 20 ஆண்டுகளாக பணியாற்றினார். வர்ணனை மட்டுமல்லாது சமூக அநீதிக்காக குரல் கொடுத்தவர் மைக்கல் ஹோல்டிங். அமெரிக்காவில் ஜார்ஜ் பிளாய்ட் கொலையின் பிறகான எதிர்ப்புப் போராட்டங்களுக்கு ஆதரவாக, நிறவெறிக்கு எதிராகக் குரல் கொடுத்தவர் மைக்கல் ஹோல்டிங்.

கடந்த ஆண்டு Black lives Matter இயக்கம் உச்சத்தில் இருந்த போது இங்கிலாந்து தேசத்திலிருந்து ஒலித்தது இந்த கணீர் குரல். ஹோல்டிங்கின் வர்ணனையில் அழகியலை விட அறிவியல் தான் அதிகம் இருக்கும். ஒரு கண்டிப்பான தந்தை எந்தளவு தனது பிள்ளையின் குற்றம் குறைகளை கண்டிப்பாரோ, அந்தளவு காட்டம் இருக்கும் அவரது பேச்சில்.

தவறான ஷாட் ஆடினால் எவ்வளவு பெரிய வீரர் என்றாலும் பூசி மழுகாமல், உடனே இது மோசமான ஷாட் என்ற வார்த்தைகள் வரும். பந்துவீச்சை பொறுத்தவரை இவரிடம் அரை மணி நேரம் உட்கார்ந்து பேசி விட்டு வந்தால் ஒரு புத்தகமே எழுதலாம். அவ்வளவு பெரிய பல்கலைக்கழகம் இந்த மைக்கல் ஹோல்டிங்.

தந்தையிடம் கண்டிப்பு மட்டும் தான் இருக்குமா என்ன? கடந்த 2010ஆம் ஆண்டு பாகிஸ்தான் அணியின் வீரர் மொஹமட் ஆமிர் சூதாட்ட குற்றத்தில் கைது செய்யப்படும் போது இவ்வளவு பெரிய திறமையை பணம் விலைக்கு வாங்கி விட்டதே என நேரலை நிகழ்ச்சியில் கண் கலங்கி அழுதார் ஹோல்டிங்.

மைக்கல் ஹோல்டிங்குக்கு பிடிக்காதது இருபதுக்கு 20 கிரிக்கெட். அது பற்றி பலமுறை விமர்சித்திருந்தார். வரலாற்றில் உங்களுக்கான பெயரை அழுத்தி எழுதப்போகும் டெஸ்ட் கிரிக்கெட்டை விட்டுவிட்டு இருபதுக்கு 20 விளையாடச் சொல்வது அறம் கிடையாது என்று பலமுறை சொல்லியுள்ளார். இருபதுக்கு 20 கிரிக்கெட் நல்லதா? கெட்டதா? என்ற வாதத்தை எல்லாம் தள்ளிவைத்துவிட்டு ஹோல்டிங்கின் இடத்திலிருந்து பார்த்தால் அவரின் கோபத்தில் உள்ள அர்த்தம் புரியும்.

மேற்கிந்திய தீவுகள் அணிகளில் 60 டெஸ்ட் போட்டிகளிலும் 102 ஒருநாள் போட்டிகளிலும் விளையாடிய மைக்கல் ஹோல்டிங் துடுப்பாட்ட வீரர்களுக்கு சிம்மசொப்பனமாக விளங்கினார். விக்கெட் போனால் போகட்டும் நான் தப்பினால் என விளையாடிய வீரர்கள் அதிகம். 60 டெஸ்ட் போட்டிகளில் விளையாடிய மைக்கல் ஹோல்டிங் 910 ஓட்டங்களையும் 249 விக்கெட்களையும் கைப்பற்றினார். 11 போட்டிகளில் நான்கு விக்கெட்களை கைப்பற்றினார்.

102 ஒருநாள் போட்டிகளில் 282 ஓட்டங்களையும் 142 விக்கெட்களையும் வீழ்த்தினார். ஐந்து முறை நான்கு விக்கெட்களை வீழ்த்தினார். பந்து வீச்சில் மட்டுமல்லாது மைதானத்திலும் ஆக்ரோசத்தை வெளிப்படுத்தியுள்ளார். நியூசிலாந்துக்கு எதிரான போட்டியில் நடுவர் ஆட்டமிழப்பு கொடுக்க மறுத்ததால் ஸ்டம்ப்புகளை எட்டி உதைத்து தனது ஆத்திரத்தை வெளிப்படுத்தியவர் ஹோல்டிங்.

மைக்கல் ஹோல்டிங்கை எதிர்க்க முடியாதவர்கள் அவரது நிறத்தை முன்னிலைப்படுத்தி கேவலப்படுத்தினார்கள். அவற்றுக்கெல்லாம் தனது பந்துவீச்சால் பதிலளித்தார். 1980களில் நான் சந்தித்த இன ரீதியான ஒடுக்குமுறை தற்போதும் தொடர்வது வெட்கக்கேடானது என்று ஒரு முறை கூறினார் ஹோல்டிங். சமத்துவ சமூகம் படைக்க நம்மால் முடிந்த பங்களிப்பை அளிப்பதுதான் ஹோல்டிங்கிற்கு நாம் கொடுக்கும் மிகப்பெரிய மரியாதை.

## விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

# டெஸ்ட் – T20 அணிகள் என இரண்டாக பிரியும் இலங்கை அணி

(ஏ. அகீல் சிஹாப்)

இலங்கை கிரிக்கெட் அணியானது அவுஸ்திரேலிய அணியுடனும், இந்திய அணியுடனும் அடுத்தடுத்து விளையாடவுள்ள நிலையில் இலங்கை டெஸ்ட் அணி வேறாகவும் இலங்கை இருபதுக்கு 20 அணி வேறாகவும் விளையாடுவதற்கு வாய்ப்புகள் காணப்படுகின்றன.

இலங்கை கிரிக்கெட் அணியானது பெப்ரவரி மாத ஆரம்பத்தில் அவுஸ்திரேலியாவுக்கு இருதரப்பு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டு அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியுடன் 5 போட்டிகள் கொண்ட இருபதுக்கு 20 சர்வதேச தொடரில் விளையாடுகிறது. அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் 11ஆம் திகதி ஆரம்பமாகின்ற இருபதுக்கு 20 சர்வதேச தொடரானது பெப்ரவரி மாதம் 20ஆம் திகதி நிறைவுக்கு வருகிறது.

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையானது, இந்திய அணி சொந்த மண்ணில் விளையாடும் தொடர்களின் அட்டவணையை நேற்று முன்தினம் வெளியிட்டது. அதன் அடிப்படையில் இலங்கை அணியானது பெப்ரவரி இறுதியில் இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்கிறது. இலங்கை மற்றும் இந்திய அணிகளுக்கு இடையில் இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் மற்றும் மூன்று போட்டிகள் கொண்ட இருபதுக்கு 20 சர்வதேச தொடரில் நடைபெறவுள்ளன. முதல் தொடரான டெஸ்ட் தொடர் பெப்ரவரி மாதம் 25ஆம் திகதி பெங்களூரில் ஆரம்பமாகிறது.

அவுஸ்திரேலிய அணியுடனான இருபது 20 சர்வதேச தொடர் பெப்ரவரி மாதம் 20ஆம் திகதி நிறைவுக்குவரும் நிலையில், இந்திய அணியுடனான டெஸ்ட் தொடர் பெப்ரவரி மாதம் 25ஆம் திகதி ஆரம்பமாகிறது. அந்த அடிப்படையில் இடையில் நான்கு நாட்கள் மாத்திரம் இருக்கின்ற நிலையில் தற்போதைய சூழ்நிலையில் தனிமைப்படுத்தல் போன்ற விதிமுறைகளும் காணப்படுகின்றன.

அதன் படி இலங்கை டெஸ்ட் அணி ஒரு பக்கமும் இருபதுக்கு 20 அணி இன்னொரு பக்கமும் சென்று விளையாடக் கூடிய வாய்ப்பு காணப்படுகிறது. அண்மையில் இதேபோன்றுதான் ஷிகர் தவான் தலைமையிலான மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட இந்திய அணி இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்த வேளையில், விராட் கோஹ்லி தலைமையிலான இந்திய டெஸ்ட் அணி இங்கிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.





# பெப்ரவரியில் இந்தியா செல்லும் இலங்கை கிரிக்கெட் அணி



அடுத்த மாதம் நடைபெறுகின்ற ஐ.சி.சி இருபதுக்கு 20 உலகக்கிண்ண தொடருக்கு பின்னர் இந்திய அணி தங்களது சொந்த மண்ணில் மோதவுள்ள இருதரப்பு தொடர்களின் அட்டவணை உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டதற்கமைய இலங்கை அணி 2022 பெப்ரவரி மாத இறுதியில் இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்கிறது.

2021 ஐ.சி.சி. இருபதுக்கு 20 உலகக்கிண்ண தொடருக்கு பின்னர் இந்திய கிரிக்கெட் அணி சொந்த மண்ணில் நான்கு அணிகளுக்கு எதிரான தொடரில் விளையாட இருக்கிறது.

அதன்படி நியூசிலாந்து, மேற்கிந்திய தீவுகள், இலங்கை, தென்னாபிரிக்கா ஆகிய அணிகளுக்கு எதிராக இந்திய அணி விளையாட இருக்கிறது.

நியூசிலாந்துக்கு எதிராக நவம்பர் மாதம் 17ஆம் திகதி முதல் டிசம்பர் 7ஆம் திகதி வரை மூன்று இருபதுக்கு 20 மற்றும் இரண்டு டெஸ்ட் போட்டிகளில் விளையாடுகிறது. அதன் பின்னர் அடுத்த ஆண்டு பெப்ரவரி 6ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரை மேற்கிந்திய தீவுகள் அணிக்கெதிராக மூன்று ஒருநாள் மற்றும் மூன்று இருபதுக்கு 20 போட்டிகளில் விளையாடுகிறது.

பெப்ரவரி மாதம் 25ஆம் திகதி இலங்கை அணியுடனான தொடர் ஆரம்பமாகிறது. இலங்கை அணி இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு இரண்டு டெஸ்ட் மற்றும் மூன்று இருபதுக்கு 20 போட்டிகளில் விளையாடுகிறது. பெப்ரவரி 25ஆம் திகதி ஆரம்பமாகும் தொடர், மார்ச் 18ஆம் திகதி நிறைவுக்கு வருகிறது.

ஜூன் 9ஆம் திகதி முதல் ஜூன் 19ஆம் திகதி வரை தென்னாபிரிக்காவுக்கு எதிராக ஐந்து இருபதுக்கு 20 போட்டிகளில் இந்திய அணி விளையாடுகிறது. அதன்பின் 2022ஆம் ஆண்டுக்கான ஐ.சி.சி இருபதுக்கு 20 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடர் அவுஸ்திரேலியாவில் நடைபெறுகிறது.

**vs Sri Lanka**

Feb 25-Mar 01: 1st Test, Bengaluru

Mar 05-09: 2nd Test, Mohali

Mar 13: 1st T20I, Mohali

Mar 15: 2nd T20I, Dharamshala

Mar 18: 3rd T20I, Lucknow

# கன்னி ஐ.பி.எல் போட்டியில் சகலதுறையிலும் சொதப்பிய ஹஸரங்க



2021ஆம் ஆண்டுக்கான இந்தியன் ப்ரீமியர் லீக் தொடரின் இரண்டாம் பாதி ஆட்டம் தற்போது ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெற்று வருகிறது. அந்த வகையில் தொடரின் 31ஆவது ஆட்டம் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் மற்றும் ரோயல் செலஞ்சர்ஸ் பெங்களூர் அணிகளுக்கிடையில் நேற்று முன்தினம் அபுதாபி, ஷேக் ஷெயிட் மைதானத்தில் நடைபெற்றது.

குறித்த போட்டியில் விராட் கோஹ்லி தலைமையிலான ரோயல் செலஞ்சர்ஸ் பெங்களூர் அணியில் இலங்கை அணியின் சகலதுறை வீரரான வனிந்து ஹஸரங்க கன்னி ஐ.பி.எல் போட்டியில் களமிறங்கினாலும், [illegible] வெளிப்படுத்தினார்.

குறித்த போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய விராட் கோஹ்லி தலைமையிலான ஆர்.சி.பி அணி 92 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது. துடுப்பாட்டத்தில் வனிந்து ஹஸரங்க முதல் பந்திலேயே ஆட்டமிழந்தார்.

93 எனும் இலகுவான வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய கொல்கத்தா அணி 10 ஓவர்களில் 1 விக்கெட்டை மாத்திரம் இழந்து 9 விக்கெட்கள் வித்தியாசத்தில் அபார வெற்றிபெற்றது. போட்டியில் இரு ஓவர்கள் பந்துவீசிய வனிந்து ஹஸரங்க விக்கெட் எதுவும் இன்றி 20 ஓட்டங்களை வாரி வழங்கினார்.




## பாகிஸ்தான் கிரிக்கெட் சபைக்கு தொடரும் சோகம்

# நியூசிலாந்தை தொடர்ந்து விலகிய இங்கிலாந்து

இங்கிலாந்து ஆடவர், மகளிர் கிரிக்கெட் அணிகளானது நீண்ட காலப்பகுதியின் பின்னர் பாகிஸ்தானுக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவிருந்த நிலையில் குறித்த சுற்றுப்பயணத்தில் இருந்து விலகுவதாக இங்கிலாந்து கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

நியூசிலாந்து கிரிக்கெட் அணியானது 18 வருடங்களின் பின்னர் பாகிஸ்தானுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு கடந்த வெள்ளிக்கிழமை பாகிஸ்தான் - நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான முதலாவது ஒருநாள் சர்வதேச போட்டி ஆரம்பமாகவிருந்த நிலையில் பாதுகாப்பு அச்சுறுத்தல் காரணமாக நியூசிலாந்து அணி தொடரிலிருந்து விலகுவதாக அறிவித்தது.



இது பாகிஸ்தான் கிரிக்கெட்டுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்திய நிலையில் இன்னுமொரு அதிர்ச்சியான அறிவிப்பு வெளியாகியுள்ளது. பாகிஸ்தானுக்கான தமது அணிகளின் தொடர்களை இரத்துச் செய்தமைக்கு, கொரோனா வைரஸ் தீவிரமாக பரவி வருகின்ற இப்போதைய நிலைமைகளில் தமது வீர, வீராங்கனைகளின் மனநிலைமையினை இங்கிலாந்து கிரிக்கெட் சபை பிரதான காரணமாக காட்டியிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.